வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 28.01.2023 சனிக்கிழமை இதழ் : 50 பக்கங்கள் : 16

# நட்டஈடு எங்களுக்கு வேண்டாம் சுவீகரித்த காணிகளே வேண்டும்!

## வலி.வடக்கு மக்கள் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜனவரி 28

**“காணிகளுக்கான நட்டஈடு தேவையில்லை காணிகளே எமக்கு தேவை. காணிகள் இல்லாமல் 30 வருடங்களாக வாடகை வீட்டில் இருந்து துன்பப்படுகிறோம், விவசாயம் செய்த காணி தற்போது விவசாயம் செய்யாமல் கூலி தொழிலுக்கு செல்கிறோம். காணியின் பெறுமதி தற்போதைய சூழ்நிலையில் ஒரு ஏக்கர் 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக இருக்கும்.**

ஆனால் இவர்கள் என்ன பெறுமதியை தரப்போகிறார்கள், வயதான காலத்தில் எங்களுக்கு என்று ஒரு காணி கூட இல்லாமல் தெருவில் நிற்கிறோம்.”

-இவ்வாறு தெரிவித்துள்ளனர் வலி.வடக்கில் அரசினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள்.

பலாலி சர்வதேச விமான நிலையத்திற்கான காணி விஸ்தரிப்புக்காக கடந்த

15

# போதைப்பொருள் கடத்தலுக்கு மரண தண்டனையே ஒரே தீர்வு!

## அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 28

போதைப்பொருள், கொலை, கற்பழிப்பு போன்ற குற்றங்களுக்கு மரண தண்டனை அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே தனது தனிப்பட்ட கருத்து என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

போதைப்பொருள் பரவல் எந்த வகையிலேனும் கட்டுப்படுத்தப்படும் எனவும் அவர்

15

# அடாத்தான மின்வெட்டு; ஐ.நாவிலும் முறைப்பாடு!

கொழும்பு, ஜன. 28

ஒப்பந்தத்தை மீறி மின்வெட்டை அமுல்படுத்திய இலங்கை மின்சார சபையின் தலைவர் மற்றும் அதிகாரிகள் மற்றும் மின்சக்தி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் உண்மைகள் சமர்ப்பிக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஒப்பந்தத்தை மீறி நாட்டின் பல

15

# இளவாலை, பெரியவிளான் பகுதியில் கம்பியால் தாக்கி இளைஞன் கொலை!

யாழ்ப்பாணம், ஜன. 28

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் பகுதியில் கம்பியால் தாக்கி 29 வயதுடைய இளைஞன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் வீதியில் சென்றுகொண்டிருந்தவேளை போதையில் வந்த அதே பகுதியைச் சேர்ந்த இருவர் அவருடன் முரண்பட்டனர். பின்னர் முரண்பாடு கைகலப்பாக மாறியது.

இதன்போது அவர்கள் இருவரும் சேர்ந்து

15

# யாழ். மாவட்டத்தில் 3 தேர்தல் வன்முறை!

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் இன்று வரை மூன்று தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இ.அமல்மராஜ் தெரிவித்தார்.

தேர்தலுக்கான வேட்புமனுதாக்கல் செய்யப்பட்டு தேர்தல் திகதி

15

# ‘13’ஐ நடைமுறைப்படுத்த அமைச்சரவை இணக்கம்!

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்



கொழும்பு, ஜன. 28

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

சர்வகட்சிக் கூட்டம் முன் தினம் நேற்று நடைபெற்றபோது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்வது தொடர்பில் ஜனா

15

# இலங்கையில் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க உலக சுகாதார நிறுவனம் தலையிடவேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 28

இலங்கை எதிர்கொண்டுள்ள மருந்து தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் தலையிடவேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையிலிருந்து உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு அவசர செய்தியொன்று அனுப்பப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடு குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறித்த செய்தியை உலக சுகாதார ஸ்தாபனத்துக்கு அனுப்பியுள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே கூறுகையில்-

இலங்கைக்கு பொருட்கள் தொழிநுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் மருந்

15

# தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு முழுமையான ஆதரவு வழங்குங்கள்!

## 6 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் அமெ. காங்கிரஸிடம் கோரிக்கை

நியூயோர்க், ஜன. 28

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவளிக்குமாறும் தமிழ் அரசியல் நிலையை ஜனநாயக ரீதியில் நிர்ணயித்துக்கொள்வதை முன்னிறுத்தி சுதந்திரமான சர்வஜன வாக்கெடுப்புக்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமெரிக்காவின் 6 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இனப்பிரச்னைக்கான நிரந்தர

15

# 402 உள்ளூராட்சி உறுப்பினர்களை தெரிவு செய்ய 4111 வேட்பாளர்கள்!

## யாழ். நிர்வாக மாவட்டத்தில் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். நிர்வாக மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 402 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 4111 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என யாழ். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாண தேர்தல்கள் அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். நிர்வாக மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இம்முறை

15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

## இப்படியும் நடக்கிறது...!

நடக்கவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சிக்கு யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட முகவர் இல்லை என்ற தகவலை நேற்று இந்தப் பத்தியில் தந்திருந்தேன்.

சட்டம் தெரிந்தவர்களே சட்டத்தைத் தெரிந்துகொள்ளாமலோ அல்லது அதிமேதாவித்தனத்தாலோ கோட்டை விட்டுவிடுவது சகஜம்தான்.

ஆனால், அதனைப் படித்துவிட்டு ஒரு வாசகர் மின்னஞ்சல் அனுப்பியிருந்தார்.

‘இதுதான் கடிதத்தை வாங்கி வைத்துக்கொண்டு உரிய நேரத்தில் கொடுக்கத் தவறியதால் ஏற்பட்டது. ஆனால், இதைவிட சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று இன்று நேற்றல்ல, கடந்த இரண்டாயிரத்து பதினோராம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி தேர்தலிலேயே நடந்திருந்ததே தெரியாதா?’ என்ற கேள்வியையே தலைப்பாகக்கொண்டு அந்த மின்னஞ்சல் வந்திருந்ததால், ஆச்சரியத்துடன் படித்தேன்.

அந்தத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மூன்று உள்ளூராட்சி சபைகளுக்குமாக வேட்புமனுக்களை அந்த மாவட்டத்தின் எம். பியான சிவஞானம் சிறீதரன் தயார் செய்து வைத்திருந்தார்.

அப்போது, அரசியலுக்கு அவர் வந்து மூன்று மாதங்கள். அவருக்கு பாடசாலை நிர்வாகம் தொடர்பான அலுவல்கள் என்றால் அவை அத்துபடி. ஆனால் - தேர்தல், வேட்புமனு என்பது புதிய விசயம்.

ஆனாலும் மாவட்டத்தின் அங்கீகாரம் அளிக்கப்பட்ட முகவரான சிறீதரன் எம்.பி. அந்த மூன்று சபைகளுக்குமான வேட்பாளர் நியமனப் பத்திரங்களை தயார் செய்து வைத்திருந்தார்.

அவரின் அலுவலகத்துக்கு வந்த சுமந்திரன் எம்.பியிடம் அவை சரிபார்க்கக் கொடுக்கப்பட்டன.

அவரும் அரசியலுக்கு வந்து சில மாதங்கள்தான். ஆனாலும் அவர் ஒரு சட்டத்தரணி. அனுபவம் உள்ளவர் என்ற நம்பிக்கை சிறீதரனுக்கு.

அவரும் எல்லாவற்றையும் சரிபார்த்த பின்னர் அதனை அன்றைய தினமே தாக்கல் செய்யலாம் என்றார். ஆனால், அன்று அட்டமி நவமி. அதனைத் தவிர்த்து மறுநாள் தாக்கல் செய்யவே சிறீதரன் விரும்பியபோதிலும், கிறிஸ்தவரான சுமந்திரனுக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இருக்காதுதானே. அவரோ வில்லங்கமாக அன்றே தாக்கல் செய்துவிடுவோம் என்று அடம்பிடித்ததால், இரண்டு சபைகளுக்கு அன்றைய தினம் தாக்கல் செய்வதென்று முடிவாயிற்று, சிறீதரனும் சுமந்திரனுமாக சென்று வேட்பாளர் நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்துவிட்டனர்.

ஆனால், இவர்கள் அதனை தாக்கல் செய்த உடனேயே அவை தெரிவத்தாட்சி அலுவலரால் நிராகரிக்கப்பட்டு விட்டது.

காரணம் வேறு ஒன்றுமில்லை, அந்த நியமனப்பத்திரத்தில் இருந்த அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் கையெழுத்தை ஒரு சமாதான நீதவானைக் கொண்டு உறுதிப்படுத்த தவறியிருந்தனர்.

அப்போது, ஆனந்தசங்கரி ஐயாவின் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு பங்காளிக் கட்சி. இதனால் அவசரம் அவசரமாக அவரின் கட்சியின் பெயரில் கூட்டமைப்பு போட்டியிடுவதற்காக அந்த இரண்டு சபைகளுக்கும் புதிய வேட்பாளர் நியமனப் பத்திரங்களை தயார்செய்து மறுநாள் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

அதாவது, கூட்டமைப்பு அந்த உள்ளூராட்சி தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு சபைகளில் ஆனந்தசங்கரி ஐயாவின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு இரண்டு சபைகளிலும் அமோக வெற்றிபெற்றது.

இந்தத் தகவல்களை விலாவாரியாக எழுதியிருந்த அந்த வாசகர், இன்னுமொரு விசயத்தை சுட்டிக்காட்ட மறந்து விட்டார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த இரண்டாயிரத்து நான்காம் ஆண்டிலிருந்து தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்திலேயே அனைத்து தேர்தல்களிலும் போட்டியிட்டு வருகின்றது. அதனால்தான் தமிழரசுக்காரர்கள் ஏதோ தமது சின்னத்துக்காகத்தான் மக்கள் வாக்களிக்கிறார்கள் என்று நம்பிக்கொண்டு இருக்கின்றனர். கூட்டமைப்பை பதிவுசெய்து அதற்கான தனியான சின்னம் ஒன்றைப் பெற்று போட்டியிடவேண்டும் என்று பங்காளிக்கட்சியாக இருந்த ஈ. பி. ஆர். எல். எவ். காலத்திலிருந்து தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டுவந்தபோதிலும், தமது முக்கியத்துவம் குறைந்துவிடும் என்பதாலும், அந்த சின்னத்தில் கேட்டால்தான் வெற்றியடைய முடியும் என்ற நம்பிக்கையிலும் தமிழரசுக்காரர்கள் விடாப்பிடியாக அதனை மறுத்துவந்தனர்.

ஆனால், கிளிநொச்சியில் வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட, அவசரம் அவசரமாக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டே வெற்றியடைய முடியும் என்றால் இங்கே சின்னம் ஒரு பொருட்டே இல்லை என்பது அப்போதே நிரூபிக்கப்பட்டுவிட்டது என்பதை அந்த வாசகர் ஏனோ குறிப்பிடத் தவறிவிட்டார்.

கூட்டமைப்புக்கு இனி நிரந்தரமான சின்னம் - குத்துவிளக்கு கிடைத்துவிட்டதால், இந்தத் தேர்தலுக்கு பின்னர், தமிழரசும் கூட்டமைப்போடு சேர்ந்து இயங்க வந்தாலும் அந்த புதுச்சின்னத்தில் போட்டியிட்டாலும் வெற்றி அடையலாம்தானே?!

**- ஊர்க்குருவி**

# மின்சார சபை அதிகாரிகளுக்கு மனித உரிமை குழு அச்சுறுத்தல்!

## மின்சக்தி அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 28

மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்ட இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் இருவர் ஆவணங்களில் கையொப்பமிடுமாறு வற்புறுத்தப்பட்டனர் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சின் செயலாளர் இவ்விடயத்தை தனக்கு அறியப்படுத்தினார் என்று அமைச்சர் ருவிற்றர் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

ஆவணத்தில் கையொப்பமிட உடன்படவில்லையாயின் சிறைத் தண்டனை விதிக்கப்படக்கூடும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளால் தமது அதிகாரிகள் அச்சுறுத்தப்பட்டனர் - என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், சம்பந்தப்பட்ட மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் ஏற்கனவே சட்ட ஆலோசனை பெற்றுவருகின்றனர். நடந்த நிகழ்வுகளை எழுத்துபூர்வமாக சமர்ப்பித்துள்ளனர்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் காலை ஜனாதிபதிக்கு இவ்விடயத்தை அறிவித்துள்ளதாகக் குறிப்பிடும் அமைச்சர் காஞ்சன விஜயசேகர, அரசமைப்பு பேரவைக்கும் எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஜோன்ஸ்டன் மீதான வழக்கை முன்னெடுக்க நீதிமன்றம் முடிவு

கொழும்பு, ஜன. 28

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கை முன்னெடுக்க முடியாது என பிரதிவாதிகள் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

இது தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு தடையில்லை என தெரிவித்த நீதிபதி, மே 10ஆம் திகதி விசாரணை இடம்பெறும் என்றும், சாட்சிகளை அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

சதொச ஊழியர்கள் சிலரை அவர்களின் உத்தியோகபூர்வ பணிகளிலிருந்து நீக்கி அரசியல் விடயங்களில் ஈடுபடுத்தியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

# பாராளுமன்ற அமர்வுகள் பெப். 8இற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 28

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் 3 ஆவது அமர்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி பாராளுமன்றின் புதிய அமர்வுகள் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிம்மாசன உரையை நிகழ்த்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# டயானா கமகேவுக்கு நீதிமன்று அவகாசம்!

கொழும்பு, ஜன. 28

சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரித்தானிய பிரஜையாக இருப்பதால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதியற்றவர் என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுவுக்கு எதிராக ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று கால அவகாசம் வழங்கியுள்ளது.

டயானா கமகே சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஷவீந்திர பெர்னாண்டோ, தனது வாடிக்கையாளர் உத்தியோகபூர்வ உறுதிமொழியின் பேரில் வெளிநாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ளதால் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய மேலும் இரண்டு மாத கால அவகாசம் கோரினார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹபீல் ஃபாரிஸ், நிஷிகா பொன்சேகா ஒத்திவைப்புக்கு ஆட்சேபனைகளை எழுப்பினார்.

இந்த வழக்கு “எல்லா ஆண்களும் சமம் மற்றும் சில ஆண்கள் மற்றவர்களை விட சமமானவர்கள்” என்பதைக் காட்டுகிறது என்று கூறினார்.

டயானா கமகேவின் நடத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

உண்மைகளை கருத்தில் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, டயானா கமகேவுக்கு ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கியது.

டயானா கமகே பாராளுமன்ற உறுப்பினராக இருக்க தகுதியற்றவர் என்றும், அதனால் அவர் எம். பியாக பதவி வகிக்க தகுதியற்றவர் என்றும் உத்தரவிடுமாறு கோரி சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் இந்த மனுவை தாக்கல் செய்தார்.

இந்த நிலையில், இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரித்தானிய பிரஜை எனவும், பிரித்தானிய பிரஜை ஒருவரே பிரித்தானிய கடவுச்சீட்டை வைத்திருக்க முடியும் எனவும் மனுதாரர் கோரியுள்ளார்.

வேற்று நாட்டில் குடியுரிமை பெற்றதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே இலங்கை பிரஜையாக இருப்பதை நிறுத்தியதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

டயானா கமகே இலங்கையில் இரட்டைக் குடியுரிமை அல்லது வேறு எந்த வகை குடியுரிமையையும் பெறவில்லை என்று மனுதாரர் கூறினார்.

டயானா கமகே எம்.பி.யாகத் தெரிவு செய்யப்படுவதற்கும் அல்லது இலங்கையின் அரசியலமைப்பின் 89 மற்றும் 90ஆவது சரத்தின் 91ஆவது பிரிவின் படியும் பாராளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிக்கவும் தகுதியற்றவர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ரஞ்சித் மத்தும பண்டார மனுத்தாக்கல் செய்திருந்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
28.01.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ரணிலின் சவாலுக்குப் பின்னால்?

சர்வ கட்சிக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குகொள்ளவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சி பங்குகொண்டிருந்தது. இது இரண்டாவது சர்வகட்சி சந்திப்பு. ரணில் அரசியல் பிரச்னையை எவ்வாறு தீர்க்கப் போகின்றார், இந்தக் கேள்வியுடன் நாட்கள் நகர்கின்றன. இந்த சந்திப்பின்போது, ரணில் ஒரு விடயத்தை அழுத்திக் குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது, தனக்குள்ள நிறைவேற்றதிகாரத்தை கொண்டு, அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவேன். அத்துடன் அவர் பிறிதொரு விடயத்தையும் வலியுறுத்தியிருக்கின்றார். அதாவது, நடுவில் நிற்க முடியாது - ஒன்றில் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவேண்டும் அல்லது இல்லாமலாக்க வேண்டும். முடிந்தால் ஒரு திருத்தச்சட்டத்தை கொண்டு வந்து 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாமலாக்கிக் காட்டுங்கள். அதனை செய்யும் வல்லமையோடு எவருமில்லை என்பதை ரணில் நன்கறிவார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம், நடைமுறைக்கு வந்த 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள விடயங்கள் காலத்திற்கு காலம் பிடுங்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் கடந்த 35 வருடங்களாக, 13ஆவது திருத்தச்சட்டத்தை முற்றிலுமாக இல்லாமலாக்கும் முயற்சியில் எந்தவொரு அரசாங்கமும் ஈடுபடவில்லை. கோட்டாபய ராஜபக்ஷ அதற்கான சில முயற்சிகளை மேற்கொண்டதாக தெரிந்தது. புதுடில்லியின் ஆசிர்வாதத்துடன் சில விடயங்களை செய்யலாமென்று கோட்டாபய முயற்சித்ததாகவே தெரிந்தது. இந்த நோக்கத்தினடிப்படையில்தான் மிலிந்த மொறகொட இந்தியாவிற்கான தூதுவராக நியமிக்கப்பட்டார். மாகாண சபை முறைமை, நாட்டுக்கு பொருத்தமானதல்ல என்னும் பிரசாரத்துடன்தான் மிலிந்த மீளவும் அரசியல் அரங்கிற்குள் பிரவேசித்தார். ஆனால் தூதுவராக பொறுப்பேற்றதை தொடர்ந்து, அது தனது தனிப்பட்ட கருத்தென்று கூறி பின்வாங்கினார். கோட்டாபயவோ ஆட்சியையிழந்து அரசியல் அநாதையானார்.

இந்த பின்புலத்தில் நோக்கினால், அவ்வப்போது, சிங்கள பௌத்த அடிப்படைவாதிகள் கூக்குரலிட்டாலும் கூட, ஆட்சியிலிருந்தவர்கள் எவருமே 13ஐ இல்லாமலாக்க முயற்சிக்கும் விசப்பரீட்சையில் ஈடுபடவில்லை. இதற்கு காரணம் இந்திய-இலங்கை ஒப்பந்தமாகும். இந்திய-இலங்கை ஒப்பந்தமானது, இரண்டு நாடுகளுக்கிடையிலான உடன்பாடு. அதனை ஒரு நாடு தன்னிச்சையாக மீற முடியாது. அவ்வாறு மீறினால் இந்தியா அதற்கு பதிலளிக்கும். அந்தப் பதில் எவ்வாறும் அமையலாம். இதனைக் கருத்தில் கொண்டே, ஆட்சியாளர்கள் அதனை முற்றிலுமாக இல்லாமலாக்க முயற்சிக்கவில்லை. ஆனால் அதனை முழுமையாக அமுல்படுத்துவதை ஏதோவொரு வகையில் இழுத்தடித்து அல்லது புறம்தள்ளி வந்தனர். இன்றுவரையில் அதுதான் நிலைமை.

இவ்வாறானதொரு சூழலில்தான், ரணில் விக்கிரமசிங்க தற்போதை நெருக்கடி நிலைமையை கருத்தில்கொண்டு, 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தப் போவதாக கூறுகின்றார். இந்தியாவும் அதனை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. அதேவேளை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையிலும் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இந்த விடயங்களிலுள்ள சிக்கல்களை ஏனையவர்களை விடவும் ரணில் விக்கிரமசிங்க நன்கறிவார். அதேவேளை 13 இற்கு அப்பால் செல்வதற்கான அழுத்தங்களும் ஆட்சியாளர்களுக்கில்லை. இதனையும் ரணில் நன்கறிவார். சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் நாம் அதிகம் பேசிக்கொண்டாலும், தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வைத்தான் வழங்கவேண்டுமென்று வெளி அழுதங்கள் இல்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் 13இற்கு அப்பால் செல்லவேண்டிய நெருக்கடிகள் சிங்கள ஆட்சியாளர்களுக்கில்லை.

இதனை கருத்தில் கொண்டே, தேசிய இனப்பிரச்னையை 13இன் அடிப்படையில் தீர்க்கும் நகர்வுகளை ரணில் முன்னெடுத்து வருகின்றார். ரணில் ஒரு வேளை இந்த விடயத்தில், உண்மையான ஈடுபாட்டுடன் இருந்தால், இதில் சில முன்னேற்றங்களுக்கு வாய்ப்புண்டு.

# ஒரு மாத நிலுவை இருந்தால் மின்சாரம் துண்டிக்கப்படும்!

## யாழ். பிரதம மின் பொறியியலாளர் அறிவிப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 28*

*யாழ். மாவட்ட மின்சார பாவனையாளர்கள் ஒரு மாதத்துக்கு மேல் மின்சாரக் கட்டணம் நிலுவையாக உள்ளவர்களின் மின் இணைப்பு எதிர்வரும் வாரங்களில் துண்டிக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ். தலைமையக பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.*

*இவ்வாறு மின்சார இணைப்பு துண்டிக்கப்படும் சந்தர்ப்பத்தில் 3 ஆயிரத்து 250 ரூபாய் மீள் இணைப்புக் கட்டணம் அறவிடப்படுவதோடு 6 மாத காலத்துக்கு மேல் மின் துண்டிப்பு செய்யப்பட்டும் நிலுவைக் கட்டணத்தை செலுத்தாத பாவனையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.*

*எனவே, மின்சார கட்டணம் செலுத்தாது நிலுவை உள்ள பாவனையாளர்கள் உடனடியாக மின்சாரக் கட்டண நிலுவையைச் செலுத்தி மின்சாரத் துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுமாறு பொறியியலாளர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)*

# பரீட்சை காலத்திலும் மின் தடை தொடரும்!

## அறிவித்தது மின்சார சபை

*கொழும்பு, ஜன. 28*

*உயர்தரப் பரீட்சைகள் நிறைவடையும் வரை மின் வெட்டை அமுலாக்காமல் இருக்க முடியாது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.*

*அவ்வாறு மின்வெட்டினை அமுலாக்காது இருக்கவேண்டுமாக இருந்தால், அதற்கான கிரயத்தை சமாளிப்பதற்கான நிதி வழங்கப்படவேண்டும் என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் நலிந்த இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.*

*இந்த நிதி வழங்கப்படாமல், மின்சார தடையை இடைநிறுத்த முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.*

*உயர்தரப் பரீட்சைகள் நிறைவடையும் வரையில் மின்வெட்டை அமுலாக்காதிருக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இணக்கம் காணப்பட்டது.*

*ஆனால் நாட்டில் பரவலாக மின்தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது.*

*இந்த நிலையில், சட்டக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க, உறுதிப்பாட்டை மீறி மின் தடை அமுலாக்கப்படுமாக இருந்தால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின் சார சபையை எச்சரித்துள்ளார்.*

*இது தொடர்பாக கருத்து தெரிவித்த இலங்கை மின்சார சபையின் தலைவர், இந்த காலப்பகுதியில் மின் தடையை நிறுத்துவதாக இருந்தால், அதற்கு 4.1 பில்லியன் ரூபாய் மேலதிக தேவையாக இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். (அ)*

# 685 பொருட்களுக்கு விதித்த தடை குறித்து பரிசீலனை!

*கொழும்பு, ஜன. 28*

*தடை செய்யப்பட்ட 1,465 பொருட்களில் 780 பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.*

*இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பில் எதிர்காலத்தில் மீளாய்வு நடத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக எடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் மிகவும் கவனமாக எடுக்கப்பட வேண்டும் என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.*

*இதற்கிடையில், வருவாய் நிர்வாக முகாமைத்துவ தகவல் அமைப்பு அல்லது ‘RAMIS’ அமைப்பை வினைத்திறன் மிக்கதாக மாற்ற இரண்டு துணைக் குழுக்களை நிறுவ அரசு கணக்குகள் குழுவில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.*

*2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பில் 10 பில்லியன் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ள போதிலும் அது முறையாகச் செயல்படவில்லை எனத் தெரியவந்துள்ளது. (ஐ)*

# மீன்பிடிக்க சென்றவர் ஆற்றில் சடலமாக மீட்பு

*கொழும்பு, ஜன. 28*


*தியவன்ன ஆற்றில் மீன்பிடிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி காணாமல் போன இளைஞனின் சடலம் நேற்று அதிகாலை கண்டுபிடிக்கப்பட்டதாக தலங்கமை பொலிஸார் தெரிவித்தனர்.*

*ராஜகிரிய வெலிக்கடை புத்கமுவ வீதியைச் சேர்ந்த 18 வயது இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*இவர் மேலும் மூன்று நண்பர்களுடன் சிறீ ஜெயவர்தனபுர பாராளுமன்ற வளாகத்தின் அருகில் உள்ள தியசரு தோட்டத்துக்கு அருகில் வந்து, தியவன்ன ஆற்றை சுற்றி கட்டப்பட்டுள்ள பாதுகாப்பு வேலிக்குள் அத்துமீறி நுழைந்து நேற்று முன்தினம் காலை படகின் உதவியு டன் தியவன்ன ஆற்றுக்கு மீன்பிடிக்க சென்றுள்ளனர்.*

*இந்நிலையிலேயே படகு கவிழ்ந்ததில் இந்த இளைஞர் காணாமல் போயிருந்தார். ஏனைய இருவரும் நீந்தி கரை சேர்ந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
முயற்சிகளில் தடைகள் ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். செயல்களில் கவனம் தேவை. முயற்சியில் இழுபறி உண்டானாலும் போராடி முடிப்பீர்கள். எதிர்பாலினர் நட்பில் எச்சரிக்கை அவசியம்.

**இடபம்**
முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பண வரவு திருப்தியாக இருக்கும். இழுபறியாக இருந்த செயல்கள் நிறைவேறும். எதிர்பார்த்த ஒன்று உங்களை வந்து சேரும். உங்கள் திறமை வெளிப்படும்.

**மிதுனம்**
தொழிலில் புதிய உத்திகளைக் கையாள்வீர்கள். உறவினர் வழியில் நன்மைகள் அதிகரிக்கும். புதிய முயற்சி ஒன்று வெற்றியாகும். தொழிலில் போட்டியாளர்கள் விலகுவார்கள்.

**கடகம்**
தந்தை வழி உறவுகளால் உதவி கிடைக்கும். தொழிலில் எதிர்பாராத திருப்பத்தை சந்திப்பீர்கள். முயற்சியில் வெற்றிபெற திட்டமிட்டு செயல்படுவீர்கள். உங்கள் தனித்திறமை வெளிப்படும்.

**சிம்மம்**
எதிரிகளால் சங்கடங்களை சந்திக்க வேண்டியதாக இருக்கும். செயல்களில் நெருக்கடிகளை சந்திப்பீர்கள் மனதில் ஒருவித பயம் வந்துபோகும். எதிர்பார்த்த வற்றில் தடைகள் உண்டாகும்.

**கன்னி**
புதிய முயற்சி ஒன்றில் ஆதாயம் காண்பீர்கள். நட்புகளால் நன்மை உண்டு. உங்கள் அணுகுமுறையால் செயலில் ஆதாயம் உண்டாகும். இழுபறியாக இருந்த பிரச்னை முடி விற்கு வரும்.

**துலாம்**
முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். தொழிலில் போட்டியாளர்களால் உண்டான நெருக்கடி விலகும். நிறை வேறாமல் இருந்த ஒரு வேலை இன்று முடிவிற்கு வரும்.

**விருட்சிகம்**
உங்களுடன் நெருக்கமாக இருந்தவர்களின் வழியே, சில சங்கடங்களை சந்திக்க வேண்டியதாக இருக்கும். செயல்கள் இழுபறியாகும். நினைத்தது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். குழந்தைகள் வழியே நன்மை அடைவீர்கள்.

**தனுசு**
தேவையற்ற பயம் வந்து போகும். பண விஷயங்களில் கூடுதல் கவனம் தேவைப்படும். உங்கள் சந்தோஷத்திற்காக ஒரு செயலில் ஈடுபடுவீர்கள். நெருக்கமானவர்களின் ஆதரவு நன்மை தரும்.

**மகரம்**
இழுபறியாக இருந்த ஒரு செயல் நிறைவேறும். எதிர்பார்த்த ஆதாயத்தை அடைவீர்கள். செயலில் இருந்த தடைகள் விலகும். முயற்சியில் வெற்றிகளைக் காண்பீர்கள்.

**கும்பம்**
பேச்சில் நிதானம் தேவை. அவசரப்பட்டு யாருக்கும் எந்த வாக்குறுதியும் கொடுக்க வேண்டாம். உங்கள் கவனக்குறைவால் சில இழப்புகள் உருவாகலாம். நிதானித்து செயல்படுங்கள்.

**மீனம்**
மனம் அலைபாயும். முக்கியமான ஒரு செயலில் முடிவிற்கு வர முடியாமல் போகும். பணியில் நெருக்கடிகளை சந்திப்பீர்கள். பொறுப்புகளில் கூடுதல் கவனம் தேவை. வியாபாரத்தில் சில சங்கடங்களை சந்திக்க வேண்டியதாக இருக்கும்.

# தமிழில் வேத மந்திரம் முழங்க பழனி முருகனுக்கு குடமுழுக்கு!



திண்டுக்கல், ஜன. 28

தமிழில் வேதமந்திரங்கள் முழங்க கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு பழனி தண்டாயுதபாணி சுவாமி மலைக் கோயிலில் நேற்று வெள்ளிக் கிழமை பக்தர்களின் அரோகரா முழக்கத்துடன் குடமுழுக்கு கோலாகலமாக நடைபெற்றது.

குடமுழுக்கு நடைபெறுவதையொட்டி, பாதுகாப்புப் பணியில் 2,000 பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

முருகனின் அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் 16 ஆண்டுகளுக்குப் பிறகு நேற்று குடமுழுக்கு பக்தர்களின் அரோகரா முழக்கம் விண்ணை முட்டிய நிலையில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. விழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்து வருகின்றனர்.

குடமுழக்கு விழாவுக்காக கடந்த 23ஆம் திகதி மாலை முதல் கால வேள்வியுடன் யாக சாலை பூஜைகள் தொடங்கின. இதைத் தொடர்ந்து வியாழக் கிழமை 6, 7ஆம் கால யாக சாலை பூஜைகள் நடைபெற்றன. ஆறாம் கால பூஜை நிறைவில் படிப் பாதையில் உள்ள இடும்பன், கடம்பன் கோயில்கள், அடிவாரம் பாதவிநாய கர் கோயில், கிரிவீதியில் உள்ள 5 மயில்களுக்கு குடமுழுக்கு செய்வதற்காக திருக்குடங்கள் ஊர்வலமாக படிவழிப் பாதையில் கொண்டு வரப்பட்டன.

அப்போது, மேள தாளங்கள் முழங்க பரிவாரத் தெய்வத் திருக்குடங்கள் திருவுலா எழுந்தருளச் செய்யப்பட்டு, அந்தந்தக் கோயில்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. அடிவாரம் பாதவிநாயகர் கோயிலில் காலை 9.45 மணிக்கு மேல் முதல் குடமுழுக்கு நடைபெற்றது. சிவாச்சாரியர்கள் தமிழில் வேதமந்திரம் முழங்க, ஓதுவார்கள் திருமுறைப் பாடல்கள் பாட திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது.

தொடர்ந்து, தெளிப்பான் மூலம் தீர்த்தம் தெளிக்கப்பட்டது. பின்னர், படிப் பாதையில் உள்ள இரட்டை பிள்ளையார், நின்ற பிள்ளையார், வள்ளியம்மை, இடும்பன், கடம்பன், கிரிவீதியில் உள்ள 5 மயில்களுக்கும், 33 சந்நிதிகளுக்கும் 50இற்கும் மேற்பட்ட குடங்களில் தீர்த்தம் கொண்டு வரப்பட்டு, திருக்குடமுழுக்கு நடைபெற்றது.

குடமுழுக்கு விழாவை யொட்டி, 300இற்கும் மேற்பட்ட சிவாச்சாரியர்கள் தமிழில் பன்னிரு திருமுறைகள், திருப்புகழ், கந்தன் அலங்காரம் என வேதமந்திரங்களை முழங்க குடமுழக்கு விழா காலை 8 தொடங்கி 9.30 மணிக்குள் சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக கங்கை, காவிரி, சண்முகநதி என பல்வேறு நதிகளில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன.

சிவாச்சாரியார்கள் புண்ணிய தீர்த்தத்தை ராஜகோபுரம் மற்றும் தங்க கோபுரம் பரிவார தெய்வங்கள் சன்னதிகள் மேல் கொண்டுச் சென்று கலசங்களில் ஊற்றி குடகுழக்கு விழாவை நடத்தி வைத்தனர்.

குடமுழக்கு விழாவை யொட்டி இராஜகோபுரம் மற்றும் தங்க கோபுரத்திற்கு ஹெலிகொப்டர் மூலமாக மலர் தூவப்பட்டது. பக்தர்கள் மீது புனித நீர் படும் வகையில் தெளிப்பான் மூலம் புனித நீர் தெளிக்கப்பட்டது.

(ஐ)

# மோடி குறித்த பி. பி. சி. ஆவணப்படத்தை தமிழ்நாடு முழுக்க திரையிட நடவடிக்கை!

## மார்க்சிஸ்ட் கட்சி அறிவிப்பு



சென்னை, ஜன. 28

”தமிழ்நாடு முழுவதும் வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் இடதுசாரி, ஜனநாயக அமைப்புகள் முன்னின்று பி. பி. சியின் ஆவணப்பட திரையிடலையும், அதன் மீதான உரையாடலையும் முன்னெடுக்கவுள்ளோம்” என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், “இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஆர். எஸ். எஸ்., பா. ஜ. கவின் அரசியல் குறித்தும், மனித உரிமைகளை காலில் போட்டு மிதித்த பல்வேறு நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியும் பி. பி. சி. நிறுவனம், 2 பாகங்கள் கொண்ட ஆவணப் படத்தை தயாரித்துள்ளது. இந்த படம் இந்தியாவின் ஜனநாயகத்துக்கு எழுந்துள்ள சவாலை சுட்டிக்காட்டுகிறது. குஜராத் இனப்படுகொலைகளை அன்றைய மோடி தலைமையிலான மாநில அரசு நிர்வாகம் எப்படி கையாண்டது என்பதில் புதிய ஆதாரங்களை வெளிப்படுத்தியுள்ளது.

இந்திய ஊடகங்களால் செய்ய முடியாத தரமான புலனாய்வினை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களையும், பா. ஜ. கவின் தரப்பையும் பேட்டியெடுத்து அதனை பார்வையாளர்கள் முன் அப்படியே வைத்திருக்கிறார்கள். ஒன்றிய அரசாங்கம் இந்த ஆவணப்படத்தின் மீது அச்சம் கொண்டு, இணைய வெளியில் இருந்தே அகற்றி வருகிறது. அதற்காக தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவுகளை (அவசர கால) தவறாக பயன்படுத்தியுள்ளனர். ஆனால், இந்த நடவடிக்கை தவறானது, சட்ட விரோதம் என்பதை ஏற்கெனவே எதிர்க் கட்சிகளும் சுட்டிக் காட்டியுள்ளன.

இந்த நிலையில், இணையத்தில் பார்க்க முடியாத ஆவணப்படத்தை ஆங்காங்கே பொதுமக்களும், ஜனநாயக அமைப்புகளும் திரையிடல் செய்து பார்த்து வருகிறார்கள்.

இந்நிலையில், தமிழ்நாடு முழுவதும் வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் இடதுசாரி, ஜனநாயக அமைப்புகள் முன்னின்று ஆவணப்பட திரையிடலையும், அதன் மீதான உரையாடலையும் முன்னெடுக்கவுள்ளோம். பொதுமக்களின் பார்வையில் இருந்து உண்மைகளை மறைப்பது மென்மேலும் பிற்போக்கான சூழலுக்கே நாட்டை இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்து, தமிழ்நாடு அரசும், காவல்துறையும் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்திட வேண்டும் என அழுத்தமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது” என்று அவர் கூறியுள்ளார்.

(ஐ)

# சுதந்திர தினத்தை குறைந்த செலவில் பெருமையுடன் கொண்டாடவேண்டும்

## ஜனாதிபதி ரணில் அறிவுறுத்தல்

கொழும்பு, ஜன. 28

குறைந்த செலவில் பிரமாண்டமாகவும் பெருமையாகவும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதற்கமைய, 75ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு, பெப்ரவரி 02ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

அதற்கமைய சிறப்பு தலதா பூசை மற்றும் மஹாபிரித் சொற்பொழிவு, சர்வமத நிகழ்வுகள், சுதந்திர சதுக்கத்தில் கலாசார நிகழ்ச்சி, காலி முகத்திடலில் நடைபெறும் பாரம்பரிய சுதந்திர தின பிரதான நிகழ்வு, தேசிய பூங்காக்கள் மற்றும் தேசிய மிருகக்காட்சிசாலை போன்றவற்றுக்கு இலவச அனுமதி, யாழ்.கலாசார மையம் திறப்பு, கண்டி பெரஹர, தேவேந்திரமுனையில் இருந்து பருத்தித்துறை வரையிலான சிறப்பு சைக்கிள் சவாரி போன்ற பல நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்குத் தேவையான செலவுகளை மதிப்பிடும்போதும் நடைமுறையில் அதற்கான செலவுகளை மேற்கொள்ளும்போதும் நாட்டின் தற்போதைய நிதி நிலைமை குறித்து கவனம் செலுத்துவது, அரசியல் தலைமை மற்றும் அதிகாரிகளின் பொறுப்பாகும் என்றும் அதற்கேற்ப செலவினங்களைக் குறைத்து செயற்படுமாறும் ஜனாதிபதி இங்கு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு ஒதுக்கப்பட்ட பண ஒதுக்கீடு தொடர்பில் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு நிலவுவதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அது குறித்து அவதானம் செலுத்தி அதற்கான செலவினங்களை



குறைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும் இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“நாம் 75 ஆவது சுதந்திர தினத்தை நாம் கொண்டாட வேண்டும். அதை செய்யாவிட்டால் சுதந்திர தின கொண்டாட்டத்தைக்கூட நடத்த முடியாது என்று உலகம் நினைக்கும். அதே போன்று நாம் சுற்றுலாப் பயணிகளையும் முதலீட்டாளர்களையும் கவர வேண்டும்.

நம் நாட்டைப் பற்றி நல்லதொரு எண்ணத்தை உருவாக்கவேண்டும். எனவே முடிந்தவரை செலவுகளைக் குறைத்து இந்த சுதந்திர தினத்தை கொண்டாடுவோம்.

சுதந்திர தின விழாவுடன் இணைந்து நகர்ப்புற காடுகளை உருவாக்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

டுபாயில் நடைபெறும் காலநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன் இந்த நடவடிக்கைகளைத் தொடங்க எதிர்பார்க்கிறோம்.

மேலும், சில புதிய நிறுவனங்களும் தொடங்கப்பட உள்ளன. அது தொடர்பிலான சட்டங்களை இயற்றி பணிகளை ஆரம்பிக்க ஓகஸ்ட் மாதம் ஆகலாம். மேலும், காலநிலை மாற்றம் குறித்த பல்கலைக்கழகத்தை தொடங்கத் திட்டமிட்டுள்ளோம்.

இது நாட்டுக்கு நீண்டகால நன்மைகளை கொண்டு வரும். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த நடவடிக்கைகளுக்கு முழுமையாக செலவழிப்பதற்கு திறைசேரியில் பணம் இல்லை.

எனவே, முக்கிய நடவடிக்கைகளுக்கு பணம் ஒதுக்கும் போது, ஏனைய நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (அ)

# மருத்துவரின் அடிப்படை உரிமையை மீறிய பொலிஸ் அதிகாரி நட்டஈடு வழங்க உத்தரவு!

கொழும்பு, ஜன. 28

தனக்கு எதிரான மிரட்டல் குறித்து புகார் அளிக்க காவல் நிலையத்திற்குச் சென்ற மருத்துவர் ஒருவரை தாக்கி, காவல் நிலைய அறையில் அடைத்து வைத்ததன் அடிப்படை உரிமைகள் மீறப் பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த சம்பவத்துடன் தொடர்புடைய தலங்கம பொலிஸ் நிலையத்தின் சிறு முறைப்பாடுகள் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி அடிப்படை உரிமைகளை மீறிய மைக்காக சம்பந்தப்பட்ட மருத்துவருக்கு தனது தனிப்பட்ட நிதியில் இருந்து ரூ.50,000 இழப் பீடாக வழங்கவும், மேலும் மருத்துவருக்கு அரசு ரூ.50,000 வழங்கவும் உத்தரவிடப்பட்டது.

இது தொடர்பான சம்பவத்தின் விளைவாக தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்குமாறு கோரி மருத்துவர் ஹரேந்திர டி சில்வா ஜயசிங்க தாக்கல் செய்த மனுவை பரி சீலித்தபோதே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரி யந்த ஜயவர்தன, எஸ்.துரைராஜா மற்றும் குமுதுனி விக்கிரமசிங்க ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நவம்பர் 16, 2018 அன்று அவருக்கு ஒரு கும் பல் மிரட்டல் விடுத்தது குறித்து முறைப்பாடு அளிக்க பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோது, அவர் அணிந்திருந்த சட்டையைப் பிடித்து இழுத்துச் சென்று, அவரது முறைப்பாட்டை காதில் வாங்காமல் பொலிஸ் நிலையத்தில் அடைத்தனர். உண்மைகளை பரிசீலித்த நீதிமன்றம், இந்த மனு வில் முன்வைக்கப்பட்ட உண்மைகளை ஏற்றுக் கொள்வதாகக் கூறியது.

இந்த சம்பவம் அரசியலமைப்பின் 13(1) அடிப் படை உரிமைகளை மீறுவதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மனுதாரர் சார்பில் சட்டத்தரணி ஹர்ஷ பெர்னாண்டோ ஆஜரானார். (அ)


## காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது.

2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன. அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.

அததோனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட (இதுவரை வெளிவராத) சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசரணை ஈழநாடு


# கல்லுண்டாய் வாள்வெட்டு பிரதான சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் பகுதியில் இடம்பெற வாள் வெட்டுச்சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கல்லுண்டாய் பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த முதலாம் திகதி அத்துமீறி உள் நுழைந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்தவர்கள் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் மானிப்பாய் பகுதியை சேர்ந்த 22 வயதான பிரதான சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சொந்த மகளை வல்லுறவு செய்த தந்தைக்கு 48 வருட கடூழிய சிறை

கொழும்பு, ஜன. 28

தனது சொந்த மகளை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றத்தை ஒப்புக்கொண்ட தந்தை ஒருவருக்கு 48 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து கேகாலை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயகி டி அல்விஸ் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான துஷார என அழைக்கப்படும் உக்கல்கொட கெதர ரத்நாயக்க, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 500,000 ரூபா நட்டஈடு வழங்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி தனது பெற்றோர் மற்றும் இளைய சகோதரர் மற்றும் சகோதரியுடன் வசித்து வந்ததாக நீதிமன்றத்தில் கூறப்பட்டது. தந்தை கூலித்தொழிலாளி. சிறுமிக்கு 13 வயது இருக்கும்போது, தாய் குவைத் நாட்டுக்கு வீட்டு வேலை செய்து சென்றுள்ளார்.

இதன்போது தந்தை தனது மகளை பலமுறை பலாத்காரம் செய்துள்ளார். (அ)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு: யாழ். வலயம் தேசிய மட்டத்தில் முதலிடம்!

கொழும்பு, ஜன. 28

தரம் ஐந்து பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். கல்வி வலயம் தேசிய மட்டத்தில் முதல் நிலையைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இவ் வருடம் தரம் 5 பொதுப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் தொகை -329,668

இதில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை- 48,257

வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் சதவீதம்-14.64%

வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில், வடமாகாணத்தில் பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்கை - 17,622

வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் தொகை - 2,749

அதன் சதவீதம் - 15.6%

தேசிய மட்டத்தில் நிலை - 6

வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வலயங்களின் தேசிய மட்டத்தில் நிலை

- யாழ். கல்வி வலயம் - (25.37%) - 1
- பொலநறுவை வலயம் - (21.71%) - 2
- தங்காலை வலயம் - (21.51%) - 3
- கம்பகா கல்வி வலயம் - (21.44%) - 4
- வலஸ்முல்ல வலயம் - (20.80%) - 5
- பதுளை கல்வி வலயம் - (20.41%) - 6
- நிக்கரவெட்டிய வலயம் - (20.03%) - 7

(அ)

# அடகு வைக்கப்பட்ட நகைகளை இழந்த வாடிக்கையாளர்களுக்கு விரைவில் தீர்வு

## 10 வருடங்களின் பின் மனம் திறந்தனர் மக்கள் வங்கி அதிகாரிகள்!

யாழ்ப்பாணம், ஜன. 28

மக்கள் வங்கியின் திருநெல்வேலி சேவை நிலையத்தில் அடகு வைக்கப்பட்ட நகைகளை அங்கு பணியாற்றிய அதிகாரி ஒருவர் கையாடிச் சென்றதன் காரணமாகத் தமது நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மிக விரைவில் உரிய தீர்வு பெற்றுத் தரப்படும் என மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம். டபிள்யூ. சூரியகுமார தெரிவித்துள்ளார்.

அடகு வைத்த நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் வாடிக்கையாளர்களுடனான சந்திப்பின்போதே மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம். டபிள்யூ. சூரியகுமார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கியின் திருநெல்வேலி சேவை நிலையத்தில் அடகு வைக்கப்பட்ட ஒரு தொகுதி நகைகளை அங்கு பணியாற்றிய அதிகாரி ஒருவர் கையாடிச் சென்றுவிட்டார் என்ற காரணத்தினால், கடந்த 2012 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் அடகு வைக்கப்பட்ட தமது நகைகளை மீட்க முடியாத வாடிக்கையாளர்களுக்கும், வங்கி அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று காலை, 09:30 மணியளவில் கன்னாதிட்டியில் அமைந்துள்ள பிராந்தியத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.



இந்தச் சந்திப்பில் மக்கள் வங்கியின் கிளை வலையமைப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம். டபிள்யூ. சூரியகுமார, பிராந்திய முகாமையாளர், கே. கோடீஸ்வரன், பிராந்திய சட்ட அதிகாரி திருமதி எஸ்.சுகாஸ் மற்றும் பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர், திருநெல்வேலி கிளை முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களிடம் பேசிய பிரதிப் பொது முகாமையாளர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மக்கள் வங்கிக் கிளை ஒன்றில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் உங்கள் உணர்வுகளை நாங்கள் மதிக்கிறோம். இத்தனை வருடங்களாக பொறுமை காத்த உங்களுக்கான நல்ல செய்தி ஒன்றுடனேயே உங்களைச் சந்திக்கிறோம். மிகவும் துன்பகரமாக நாங்கள் உணர்கிறோம். வங்கியின் அதிகாரிகள் விட்ட தவறுக்காக உங்களைப் பாதிப்படைய விட்டிருக்கக்கூடாது. சில சட்ட நடைமுறைகளின் காரணமாக உங்களுக்கு உடனடியாகத் தீர்வைத் தர முடியாத நிலையில் இருக்கிறோம். ஆனாலும், உங்களுக்கு விரைவாகத் தீர்வைப் பெற்றுத் தருவதற்காக வங்கி சில நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. இதுவரை காலமும் நீதவான் நீதிமன்றத்தில் நடத்தப்பட்டுக்கொண்டிருந்த வழக்கு இப்போது உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அந்த விசாரணை முடிந்ததும் இயலுமான அளவு விரைவாக வாடிக்கையாளர்களின் நகைகள் விடுவிக்கப்படும், அவ்வாறில்லாமல் தாமதமேற்படுமாயின் வங்கியின் தலைமைக் காரியாலய அதிகாரிகளுடன் பேசி நகைகளுக்கான இன்றைய சந்தைப் பெறுமதியைப் பெற்றுத்தர முயற்சிப்போம் என்று குறிப்பிட்டார்.

இதன்போது கலந்து கொண்ட வாடிக்கையாளர்கள் சார்பில், சம்பவம் இடம்பெற்று இத்தனை வருடங்களாக மக்கள் வங்கி அதிகாரிகள் பாராமுகமாகச் செயற்பட்டதுடன், வாடிக்கையாளர்கள் மீது காட்டமாக நடந்துகொண்ட சம்பவங்கள் குறித்தும் தமது கண்டனத்தையும் வெளிப்படுத்தினர். அத்துடன் ஒவ்வொருவரும் தத்தமது பிரச்னைகளை வெளிப்படுத்தினர். கடந்த காலத்தில் இடம்பெற்ற அத்தனை சம்பவங்களுக்கும் வருத்தம் தெரிவித்த வங்கி அதிகாரிகள், தாங்கள் வாடிக்கையாளர்களுக்காகத் தம்மால் இயன்ற நடவடிக்கைகளை எடுப்போம் என்று உறுதியளித்துடன், அடகு நகை மோசடியினால் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 65 வாடிக்கையாளர்களுக்கும் அவர்களது நகைகளை விரைவில் மீளளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிப்பாட்டை எழுத்து மூலம் தருவதாகவும் உறுதியளித்தனர்.

இருந்தபோதிலும், வழமை போல காலங் கடத்தப்படாமல், எதிர்வரும் 6 ஆம் திகதி வழக்கு விசாரணைகளின் முன்னேற்றம் பற்றியும், வாடிக்கையாளர்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கை பற்றியும் எதிர்வரும் 10 ஆம் திகதி வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று வாடிக்கையாளர்கள் கேட்டனர். வங்கி அதிகாரிகள் அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர்.

இந்த அடகு நகை மோசடி 2012 இல் இடம்பெற்ற போதிலும், இது வரை காலமும் அதிகாரிகள் வாடிக்கையாளர்களுடன் இத்தகைய சந்திப்பு எதனையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ)



# இந்திய குடியரசு தின விழாவில் கலந்துகொண்டார் கோட்டாபய

கொழும்பு, ஜன. 28

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய குடியரசு தின விழாவில் கலந்துகொண்டு மீண்டும் கவனத்தை ஈர்த்துள்ளார்.

இந்தியாவின் 74ஆவது குடியரசுதின நிகழ்வுகள் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் இலங்கையின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிலையில் கோட்டாபய ராஜபக்ஷவும் இந்த விழாவில் கலந்துகொண்டு கவனத்தை ஈர்த்துள்ளார். (அ)

# யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கு மேலும் 5 உறுப்பினர்கள் நியமனம்!

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்களாக மேலும் 5 பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களாகப் பதவி வகித்தவர்களின் பதவிக்காலம் கடந்த 15 ஆம் திகதியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, கடந்த 16 ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டு காலத்துக்கு 9 வெளிவாரி உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் மேலும் 5 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகம் வி.கனகசபாபதி, லங்கா சஸ்ரெயினபிள் வெஞ்ஜஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் குலேந்திரன் சிவராம், வடக்கு உணவு நிறுவனத்தின் ஸ்தாபகரும், பணிப்பாளருமான கபிலன் கருணானந்தன் மற்றும் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் வண. கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் ஆகியோரே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குத் தலைவர் அறிவித்துள்ளார். (அ)

# தேயிலை தொழிற்சாலை தீயில் கருகி நாசமானது!

கொழும்பு, ஜன. 28

கம்பளை குருந்துவத்தையில் உள்ள மெதகொட தேயிலை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் மொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகி இருவர் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என குருந்துவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தேயிலை தொழிற்சாலை தீப்பற்றி எரிவதாக குருதுவத்தை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதுடன் கண்டி தீயணைப்புப் பிரிவினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேயிலைத் தொழிற்சாலையின் உரிமையாளரின் மகனும் தொழிலாளி ஒருவரும் தீயில் கருகி அவர்களில் ஒருவர் கம்பளை போதனா வைத்தியசாலையிலும் மற்றையவர் குருதுவத்த பிரதேச வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# முகநூலில் அச்சுறுத்தும் வகையில் கருத்துக்கள் பதிவிட்ட நபர் கைது!

கொழும்பு, ஜன. 28

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு முகநூலில் அச்சுறுத்தும் வகையில் கருத்துக்களை பதிவிட்ட நபரொருவர் மஹரகமவில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் கணினி குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் 40 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சுதந்திர தினக் கொண்டாட்டத்துடன் இணைந்து பொதுமக்களுக்கு அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் நபர் ஒருவர் தனது முகநூலில் பல்வேறு கருத்துக்களை (பதிவுகள்) பதிவிட்டதாக வந்த முறைப்பாட்டையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கணினிக் குற்றப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது சந்தேக நபர் பல்வேறு வகைகளில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலான மேற்படி கருத்துகளை (பதிவுகளை) தனது முகநூலில் பதிவிட்டமை தெரியவந்துள்ளது.

இதன்படி, அவ்வாறான கருத்துக்களை தெரிவித்த சந்தேகநபரின் முகநூல் கணக்கை சோதனை செய்து விரிவான அறிக்கையை பெற்றுக்கொண்டதன் பின்னர், மஹரகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சந்தேகநபர் நுகேகொட கங்கொடவில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

# இலங்கைப் பொருளாதாரம் நிலைக்க இந்தியாவின் ஆதரவே முழு காரணம்!

## கூறுகின்றார் மிலிந்த மொரகொட



கொழும்பு, ஜன. 28

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின்போது இந்தியாவின் ஆதரவு, அண்டை நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது என்று இலங்கை தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட இதனை த ஹிந்துவிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியா, உரிய நேரத்தில் இலங்கைக்கு உதவியளித்து இலங்கையின் பொருளாதார உயிர்வாழ்தலை உறுதி செய்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் இலங்கைக்கான உதவியை உறுதிப்படுத்தியுள்ளார் என மிலிந்த மொரகொட தெரிவித்தார்.

இன்று இலங்கையின் பொருளாதாரம் நிலைத்திருப்பதற்கு இந்தியா வழங்கிய ஆதரவே காரணம் என்பதை மீண்டும் வலியுறுத்தவேண்டும்.

யாரும் தலையிடாத போது இந்தியாவின் ஆதரவு கிடைத்தது.

சர்வதேச நாணய நிதியத்திடம் சுமார் 2.9 பில்லியன் டொலர் கடனுக்காக இலங்கை சென்றுள்ளது.

அது பல நிபந்தனைகளுடன் பல ஆண்டுகளாக வழங்கப்படும். அதனுடன் ஒப்பிடுகையில், இந்தியா உண்மையில் எங்களுக்கு 3.9 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

சீனா மற்றும் பரிஸ் கிளப்புக்கு முன்னதாக இந்தியாவே இந்த உதவியை வழங்கியுள்ளது.

இதேவேளை, எதிர்காலத்தில் இந்தியாவின் முதலீடு, சுற்றுலா மற்றும் வர்த்தகம் என மூன்று முக்கிய பகுதிகளில் இருக்கவேண்டும் என்று தாம் கருதுவதாக மிலிந்த மொரகொட குறிப்பிட்டார்.

சீனாவின் கப்பல் விடயத்தை அடுத்து எழுந்த பிரச்னை குறித்து கருத்து வெளியிட்ட அவர், இலங்கையின் வரலாறு முழுவதிலும், நாடு, பெரும் சக்திகளின் போட்டிகளைச் சமாளிக்கவேண்டியிருந்தது என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் பாதுகாப்பு பிரச்னைகள் வரும்போது, இந்தியாவின் பாதுகாப்பே இலங்கையின் பாதுகாப்பாகும் என்றும் மிலிந்த மொரகொட கூறினார். (அ)



# சவூதி வெளியுறவு அமைச்சரை சந்தித்துப் பேசினார் அலி சப்ரி

கொழும்பு, ஜன. 28

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு சவூதி அரேபியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் அஹமட்டை சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பானது நேற்று முன்தினம் இடம்பெற்றதாக அரப் நியூஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பின்போது இலங்கை மற்றும் சவூதி அரேபியாவுக்கு இடையேயான பொருளாதார உறவுகள் மற்றும் எரிசக்தி ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பெரும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் முதலீட்டு வாய்ப்புகள் உள்ளிட்ட சகல விடயங்களிலும் சவூதி அரேபியா இலங்கை மீது அக்கறை கொண்டுள்ளதையும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதன்போது சுட்டிக்காட்டினார்.(அ)

# தேர்தலை முடக்க சதி!



கொழும்பு, ஜன. 28

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களை இராஜினாமா செய்ய வைத்து, ஆணைக்குழுவை செயலிழக்கச் செய்யும் திட்டம் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அண்மைய நாட்களில் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், அதன் உறுப்பினர்களை நீக்கி ஆணைக்குழுவை முடக்குவதே சமீபத்திய முயற்சி எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான விடயங்கள் வரலாறு நெடுகிலும் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# எந்தவொரு பதவி விலகல் கடிதமும் கிடைக்கவில்லை



கொழும்பு, ஜன. 28

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரின் எழுத்துமூலம் பதவி விலகல் அல்லது அவ்வாறு அனுப்பப்பட்ட கடிதத்தின் நகலை இதுவரை தாம் பெறவில்லை என்று தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் பதவி விலகியுள்ளனர் எனவும், ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரின் பதவி விலகல் கடிதம் ஜனாதிபதி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருவதாக தேர்தல் ஆணைக்குழு அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் மீதுள்ள மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும் நோக்கில் அவ்வப்போது இதுபோன்ற பொய்ப் பிரசாரங்கள் உருவாக்கப்பட்டு பரப்பப்படுவதை அவதானித்துள்ளதாக தெரிவிக்கும் ஆணைக்குழு ஊடகங்களில் வெளியான செய்திகளை நிராகரித்துள்ளது.

இதன்படி, தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் திட்டமிட்டு வருவதாகவும், எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான பணிகள் எவ்வித தாமதமும் இன்றி திட்டமிட்டபடி நிறைவேற்றப்படும் எனவும் ஆணைக்குழு உறுதியளித்துள்ளது.

இதேவேளை, ஆணைக்குழுவின் உறுப்பினரான பி.எஸ்.எம்.சார்ள்ஸ், தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடந்த புதன்கிழமை கையளித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகுவதால் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாதென தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (அ)

# நீதிமன்றின் பிரதிவாதி கூண்டில் ஏற மறுத்த முன்னாள் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 28

ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பிலான விசாரணை நேற்று இடம்பெற்ற வேளையில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதிவாதி கூண்டில் ஏற மறுத்ததை கொழும்பு - கோட்டை நீதவான் திலின கமகே கண்டித்துள்ளார்.

இதனை அடுத்து அவர் பிரதிவாதி கூண்டில் ஏறினார் என தெரிவிக்கப்பட்டது.

ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதலை தடுக்க தவறியமை தொடர்பில் அருட்தந்தை சிறில் காமினி உள்ளிட்ட இருவர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போதே இந்த கண்டிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதிவாதிக் கூண்டில் ஏறாது, அதற்கு வெளியே நின்றதை அவதானித்த முறைப்பாட்டு தரப்பு சட்டத்தரணி ரியென்சி ஹர்சகுலரத்ன நீதிமன்றத்தின் கவனத்துக்கு அதனை கொண்டு சென்றார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, தமது கட்சிக்காரர் சார்பில் தொடரப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, எதிர்காலச் செயற்பாடுகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை விதித்துள்ளதென தெரிவித்தார்.

எனவே, அவர் சாட்சி கூண்டில் ஏறவேண்டிய அவசியமில்லை என்றும் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து மனுதாரர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன மீதான வழக்கு நடவடிக்கைகளை தற்காலிகமாக முன்கொண்டு செல்லவில்லை என அறிவித்துள்ளபோதும், பிரதிவாதி, கூண்டில் ஏற வேண்டியதில்லை என எந்த இடத்திலும் கூறவில்லை என்று கொழும்பு - கோட்டை நீதவான் திலின கமகே குறிப்பிட்டார்.

இதனையடுத்து, முன்னாள் ஜனாதிபதி சாட்சிக் கூண்டில் ஏறினார்.

இந்த வழக்கு மீதான விசாரணை மீண்டும் மார்ச் 17 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

# இறக்குமதி மீதான கட்டுப்பாட்டினால் இதுவரை 2,500 மில். டொலர் சேமிப்பில்

கொழும்பு, ஜன. 28

சில பொருட்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 2500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சேமிக்க முடிந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த கட்டுப்பாடுகள் காரணமாக எரிபொருள், மருந்துகள், உரம் போன்ற அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை.

2022ஆம் ஆண்டோடு ஒப்பிடும் வகையில், நாடு கடுமையான பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய மற்றொரு வருடம் வராது என்று நிதி அமைச்சு எதிர்பார்க்கிறது.

ஆனால், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்கள் தாங்கள் அனுபவித்த துன்பங்களை மறந்துவிட்டனர்.

சுதந்திரத்திற்குப் பிறகு நாம் அனுபவித்த மிகக் கடினமான ஆண்டு 2022 என்று நான் கூறினால் அது மிகையாகாது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாத இறுதியில், நிதியமைச்சு சுமார் 1,465 எச்.எஸ் குறியீடுகளை முற்றிலுமாக தடை செய்து, பட்டங்கள், ரோஜா பூக்கள், டூத்பிக்ஸ் மற்றும் விளக்குகள் உள்ளிட்ட ஏராளமான பொருட்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டது.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையால், வரிகளை உயர்த்துவது, அறிவித்தல் வழங்குவது போன்ற பிற வழிகளில் இறக்குமதியைக் கட்டுப்படுத்தாமல் அந்தக் கடுமையான முடிவை எடுக்க வேண்டியிருந்தது.

பின்னர், பல எச்.எஸ் குறியீடுகள் தடையிலிருந்து மீளப்பெறப்பட்டன, அதே நேரத்தில் 685 பொருட்கள் இன்னும் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக, எம்மால் இதுவரை 2,500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சேமிக்க முடிந்துள்ளது - என்றார். (அ)

# தமிழகத்தில் நடக்கும் இடைத்தேர்தலில் இரண்டுபட்டுள்ள அ. தி. மு. கவில் பலபரீட்சை!

# ஜெயலலிதா பாணியில் பழனிச்சாமி அதிரடி: 110 பேர் கொண்ட பணிக்குழுவை அறிவித்தார்!



தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இந்த இடைத்தேர்தலில் ஆளும் திமுக கூட்டணி சார்பில் காங்கிரஸ் வேட்பாளராக ஈவிகேஎஸ் இளங்கோவன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். அந்த தேர்தலுக்காக, அ.தி.மு.க., சார்பில், 111 பேர் இடம் பெற்றுள்ள மிகப்பெரிய பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தலைமையிலான இக்குழுவினரை, இடைத்தேர்தல் பணியில் களமிறக்கவும், ஜெயலலிதா பாணியில் ஆளும் கட்சிக்கு எதிராக அதிரடி காட்டவும், பழனிசாமி திட்டமிட்டுள்ளார். இதன் வாயிலாக விமர்சனங்களை முறியடித்து, கட்சியை தன் வசமாக்கவும் மும்முரம் காட்டி வருகிறார்.

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதிக்கு, பெப்ரவரி 27ல் இடைத்தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலானது ஆளுங்கட்சியை விட, எதிர்க்கட்சிகளுக்கு அக்னி பரீட்சையாக அமைந்து உள்ளது.

காரணம், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க., பிளவுபட்டுள்ளது. பழனிசாமி - பன்னீர்செல்வம் தலைமையில், அக்கட்சியினர் தனித்தனியே இயங்குகின்றனர்.

வேட்பாளருக்கு சின்னம் கோரும் படிவத்தில், இருவரும் கையெழுத்திட்டால் தான், இரட்டை இலை சின்னத்தை பெற முடியும் என்ற நிலை உள்ளது. இதுகுறித்து கவலைப்படாமல், இடைத்தேர்தலில் போட்டியிட்டு, கட்சி தன் பக்கம் உள்ளதை நிரூபிக்க, பழனிசாமி முடிவு செய்துள்ளார்.

அதனால், கடந்த சட்டசபை தேர்தலில், அ.தி.மு.க., கூட்டணி சார்பில் போட்டியிட்ட த.மா.கா.,விடம் பேசி, இம்முறை அ.தி.மு.க., போட்டியிடும் என்று அறிவித்தார்.

அதற்கு போட்டியாக பன்னீர்செல்வமும், 'அ.தி.மு.க., சார்பில், நாங்கள் போட்டியிடுவோம். பா.ஜ., போட்டியிட்டால், அதற்கு ஆதரவு அளிப்போம்' என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து இரு தரப்பினரும், கூட்டணி கட்சி தலைவர்களை சந்தித்து ஆதரவு கோரினர். யாருக்கு ஆதரவு அளிப்பது என தெரியாமல், கூட்டணி கட்சியான பா.ஜ., திணறி வருகிறது.

இந்நிலையில், ஜெயலலிதா பாணியில் ஆளும் கட்சிக்கு எதிராக அதிரடி காட்டவும், தனக்கு எதிரான விமர்சனங்களை முறியடித்து கட்சியை வசமாக்கவும், பழனிசாமி காய்களை நகர்த்தி வருகிறார்.

ஜெயலலிதா ஆளும் கட்சியாக இருந்த போதும், எதிர்க்கட்சியாக இருந்த போதும், இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டால், அனைத்து கட்சிகளுக்கும் முன்பாக, முக்கிய நிர்வாகிகள் அனைவரையும், தேர்தல் பொறுப்பாளர்களாக அறிவிப்பார்.

ஒவ்வொருவரும் குறிப்பிட்ட ஓட்டுச்சாவடிகளுக்கு பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுவர். அவர்களுக்கு கீழ் மற்ற நிர்வாகிகள் நியமிக்கப்படுவர்.

அவர்கள் அந்தந்த ஓட்டுச்சாவடிகளில் பதிவாகும் ஓட்டுகளில், அதிக ஓட்டுகளை அ.தி.மு.க., வேட்பாளருக்கு பெற்றுத் தர வேண்டும். தவறினால், கட்சிப் பதவியை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே, பொறுப்பாளர்கள் அனைவரும் அதிக ஓட்டுகளை பெற, அனைத்து வழிகளையும் கையாளுவர்.

அதே பாணியை பின்பற்றி, ஈரோடு புறநகர் மேற்கு மாவட்ட செயலரும், முன்னாள் அமைச்சருமான செங்கோட்டையன் தலைமையில், 111 பேர் அடங்கிய தேர்தல் பணிக்குழுவை பழனிசாமி அறிவித்துள்ளார்.

இக்குழுவில், கே.பி.முனுசாமி, விஸ்வநாதன், தங்கமணி, வேலுமணி உட்பட, 51 முன்னாள் அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். இது தவிர, அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், முன்னாள் மத்தியஅமைச்சர் தம்பிதுரை, மாவட்ட செயலர்கள், எம்.எல்.ஏ.,க்கள் ஆகியோரும் இடம் பெறுகின்றனர்.

'அனைவரும் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக, தேர்தல் பணிகளை ஒன்றிணைந்து செய்ய வேண்டும். அவர்களுக்கு கட்சி நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பு அளித்து, வேட்பாளர் வெற்றியை உறுதி செய்ய வேண்டும்' என, பழனிசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இடைத்தேர்தலில், அ.தி.மு.க., சார்பில் போட்டியிட விரும்புவோரிடம், 23ம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை, விருப்ப மனுக்கள் பெறப்பட்டன. விரைவில் வேட்பாளர் அறிவிப்பு வெளியாக உள்ளது. இது தொடர்பாக, ஈரோட்டில் கட்சியினருடன் பழனிசாமி ஆலோசனை நடத்தினார்.

அவரது அதிரடி நடவடிக்கையை தொடர்ந்து, பன்னீர்செல்வம் தரப்பும் தேர்தல் பணிகளை துவக்குவதற்கான ஆயத்த பணிகளை மேற்கொண்டு உள்ளது.

இரு தரப்பும் போட்டியிடுவதில் மும்முரமாக இருக்கும் நிலையில், கூட்டணிக் கட்சியான பா.ஜ., நிலைப்பாடு என்ன என்பது, அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**ஜெயலலிதா பாணியில் ஆளும் கட்சிக்கு எதிராக அதிரடி காட்டவும், தனக்கு எதிரான விமர்சனங்களை முறியடித்து கட்சியை வசமாக்கவும், பழனிசாமி காய்களை நகர்த்தி வருகிறார்.**

### விரைவில் வேட்பாளர் அறிவிப்பு

"ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் விரைவில் அறிவிக்கப்படுவார்" என, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் தெரிவித்தார். பன்னீர்செல்வம் நேற்றுமுன்தினம் காலை, விருதுநகர் மாவட்டம் சிறிவில்லி புத்துார் ஆண்டாள் கோவிலில், சுவாமி தரிசனம் செய்தார். பின், தன் குலதெய்வ கோவிலான செண்பகத்தோப்பு பேச்சி யம்மன் கோவிலில், மதியம் நடந்த சிறப்பு வழிபாட்டில் பங்கேற்றார். அங்கு அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது, "ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதி வேட்பாளர் விரைவில் அறிவிக்கப்படுவார்" என்றார்.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் யாருக்கு ஆதரவு என்பதை அறிவிப்பதில், பா.ஜ., தாமதம் செய்வது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

### அ.தி.மு.க.,வில் யாருக்கு தமிழக பா.ஜ., ஆதரவு?

இதேவேளை, தி.மு.க., கூட்டணியில், காங்கிரஸ் சார்பில் இளங்கோவன் போட்டியிடுகிறார். அவருக்கு கமல் தலை மையிலான மக்கள் நீதி மய்யம் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

அ.தி.மு.க.,வில் பழனிசாமி, பன்னீர்செல்வம் ஆகிய இரு தரப்பினரும் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளனர். இரு தரப்பும் பா.ஜ.க.,விடம் ஆதரவு கேட்டுள்ளன.

அ.தி.மு.க., இடைக்கால பொதுச் செயலர் பழனிசாமி தரப்புக்கு ஆதரவளிக்க, பா.ஜ.க., முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இதனை சூசகமாக, தமிழக பா.ஜ.க., தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார். ஆனாலும், முடிவை அறிவிப்பதில் பா.ஜ.க., தாமதம் செய்து வருவது, பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக, பா.ஜ.க., நிர்வாகிகள் கூறியதாவது: இடைத்தேர்தலில் த.மா.கா., வேட்பாளரை, தாமரை சின்னத் தில் போட்டியிட வைக்க, பா.ஜ.க., மேற்கொண்ட முயற்சி வெற்றி பெற வில்லை.

இந்த இடைத்தேர்தலை, தங்கள் பலத்தை நிரூபிக்கும் களமாக பழனிசாமி நினைக்கிறார். போட்டியிடுவதில் உறுதியாக உள்ள அவர், அதற்கான வேலைகளை துவங்கி விட்டார்.

அதனால் தாமும் போட்டியிட வேண்டிய கட்டாயத்திற்கு பன்னீர்செல்வம் தள்ளப்பட்டுள்ளார். அ.தி.மு.க., பிளவுபட்டு இருந்தாலும் பழனிசாமி தரப்பிடம் தான் அதிக நிர்வாகிகள் உள்ளனர். எனவே, அவருக்கு ஆதரவளிக்கலாம் என, பா.ஜ.க., தலைவர்களில் ஒரு பிரிவினர் கூறுகின்றனர்.

இரு தரப்பில் யாரை ஆதரித்தாலும், லோக்சபா தேர்தலில் சிக்கலை ஏற்படுத்தும் என, பா.ஜ.க., மேலிடம் நினைக்கிறது. அதனால், பா.ஜ.க.,வை ஆதரித்து வரும் பன்னீர்செல்வத்தை சமாதானப்படுத்தும் முயற்சியில், தமிழக தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனால் தான் தாமதம். ஆனாலும், ஓரிரு நாளில் இடைத்தேர்தல் நிலைப்பாட்டை, அண்ணாமலை அறிவிப்பார். இவ்வாறு அவர்கள் கூறினர்.




# சனிப் பெயர்ச்சி பலன்கள் 2023



## விருச்சிகம்



உடல் ஆரோக்கியம் சீராகவே இருக்கும். தோற்றப் பொலிவு மேம்படும். குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து நடந்து உங்கள் நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்வீர்கள். மற்றபடி உங்களை மறைமுகமாக இடித்துப் பேசியவர்கள் அடங்கிவிடுவார்கள். வெளியூர் பயணங்களால் வெளிவட்டார நட்பு மேம்படும்.

சுப காரியம் தொடர்பான பணிகளில் பொறுப்புகள் அதிகரிக்கும். நல்லெண்ணங்களை வளர்த்துக் கொள்வீர்கள். ஆன்மிக ஈடுபாடு, ஆலயத் திருப்பணிகளிலும் ஈடுபடுவீர்கள். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். குழந்தைகளின் வழியில் மகிழ்ச்சியான சூழல் உண்டாகும்.

அனைவரிடமும் இணக்கமாகப் பழகினாலும், உங்கள் தனிப்பட்ட விஷயங்களை எவரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம். புதிய கடன்களை வாங்கி சொத்துகள் வாங்குவதை முடிந்தவரைத் தள்ளிப் போடவும். சமூகத்தில் உயர்ந்தவர்களின் நல்லுறவு ஏற்படும்.

அரசு சலுகைகள் உங்களைத் தேடி வரும். நெடுநாளைய ஆசை திடீரென்று நிறைவேறும். உங்களின் சமயோஜித அறிவால் சிக்கலான சூழ்நிலைகளிலிருந்து விடுபட்டு விடுவீர்கள்.

**உத்தியோகஸ்தர்கள்:** இடையூறுகளைப் பொருட்டாகவே கருத மாட்டீர்கள். உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் எந்தத் தடையும் இருக்காது. அலுவலகத்தில் வீண் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாதீர்கள். விரும்பிய பணியிட மாறுதல்களைப் பெறுவீர்கள். உங்களின் வேலைத்திறன் பளிச்சிடும்.

வியாபாரிகள்: வங்கிக் கடன் சரியான நேரத்தில் கிடைக்கும். புதிய யுக்தியினால் வேகமாக விற்பனையாகும் பொருள்களை லாபத்துக்கு விற்பனை செய்வீர்கள். உங்கள் திட்டங்கள், எண்ணங்களை நண்பர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டாம். போட்டிகளைச் சமாளித்து வெற்றி அடைவீர்கள்.

**விவசாயிகள்:** அரசு நிர்ணயித்த மானியங்கள் சரியான நேரத்தில் வந்தடையும். விவசாயத் தொழிலாளர்களை அரவணைத்துச் செல்லவும். பழைய கடன்களை திரும்ப அடைக் கும் முயற்சிகள் பெருமளவு வெற்றி யடையும். கொள்முதலில் நல்ல லாபம் கிடைக்கும். நீர்ப்பாசன வசதி களைப் பெருக்கும் முயற்சிகள் வெற்றி பெறும்.

**கலைத்துறையினர்:** சக கலைஞர்கள், ரசிகர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள். பேசும் நேரத்தில் அநாவசிய வார்த்தைகளை விடக் கூடாது. மறை முக குத்தல் பேச்சுகளுக்கு செவி சாய்க் காதீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அதிக வருமானத்தைப் பெற்றுத் தரும்.

**அரசியல்வாதிகள்:** கட்சியில் உங்கள் செல்வாக்கு கூடும். பேச்சில் கண்ணி யம் குறையாது பேசுங்கள். பொதுச் சேவையில் ஈடுபடுங்கள். உங்களுக்கு எதிராகப் போடப்பட்ட வழக்குகளில் சாதகமாகவே தீர்ப்பாகும். எதிர்க்கட்சி யினரிடம் சாதுர்யமாக நடந்துகொள் ளுங்கள்.

**பெண்கள்:** குடும்பத்தில் ஒற்றுமை நிறையும். உங்கள் பேச்சை உறவினர்கள் குறை கூறுவார்கள். ஆடை, ஆபரணங்கள் சேர்க்கை உண்டாகும். கணவரிடம் அன்பும் பாசமும் அதிகரிக்கும். மழலைச் செல்வத்தால் பெருமைப்படுவீர்கள்.



**மாணவர்கள்:** கடுமையாக உழைத்துப் படித்து சாதனை புரியும் காலமாகும். உழைப்புக்கேற்ற மதிப்பெண்களைப் பெறுவீர்கள். பெற்றோர், ஆசிரியர்களின் பேச்சைக் கேட்டு நடக்கவும். உள்ளரங்கு விளையாட்டுகளில் வெற்றி பெறும் எண்ணம் மேலோங்கும்.

பரிகாரம்: ஸ்ரீகிருஷ்ணரை வழிபடவும்.

## தனுசு



உங்கள் முயற்சிகளை மற்றவர்களின் உதவியின்றி தனித்து செயல்படுத்தி வெற்றி பெறுவீர்கள். தன்னம்பிக்கையுடன் பேசுவீர்கள். உங்களின் நடை, உடை, பாவனைகளில் ஒரு வேகம் உண்டாகும். உங்கள் கருத்துகளை அடுத்தவர்கள் கவனத்துடன் பரிசீலிப்பார்கள். வருமானம் பெருமளவுக்கு வந்து கொண்டிருக்கும்.

பெற்றோருக்கு சிறிது மருத்துவச் செலவு உண்டாகும். பழைய கடன்களையும் நயமாகப் பேசி வசூலிப்பீர்கள். உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். சிலருக்கு மறைமுக விமர்சனங்களும் ஏற்பட்டு நீங்கும். சுபகாரியம் தொடர்பான பணிகளில் பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்பத்துடன் புனித தலங்களுக்கும் சென்று வருவீர்கள்.

புத்துணர்ச்சியான சிந்தனைகளின் மூலம் மகிழ்ச்சியான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வீர்கள். அனைவருடனும் நல்லுறவு வைத்துக் கொள்ள எடுக்கும் முயற்சிகள் ஜெயமுண்டாகும். உங்கள் செயல்களில் சில சமயங்களில் தொடர்ந்து கடும் போட்டிகள் நிலவும்.

**உத்தியோகஸ்தர்கள்:** இயந்திர வாழ்க்கையிலிருந்து விடுபட்டு சிந்தனைகளுக்கும் செயல்வடிவம் கொடுப்பீர்கள். முன்னேறத் தடையாக இருப்பவர்களைக் கண்டு விலக்கி விடுவீர்கள். மேலதிகாரிகளின் ஆதரவோடு பதவி உயர்வும் கிடைக்கும். உங்கள் அலுவலக வேலைகளில் பளு கூடினாலும் அவைகளைச் சமார்த்தியமாகச் சமாளித்துவிடுவீர்கள். புதிய வண்டி, வாகனச் சேர்க்கை உண்டாகும்.

**வியாபாரிகள்:** வியாபாரத்தில் வளர்ச்சியைக் காண்பீர்கள். தொடர்ந்து வந்த தடைகள் நீங்கி, வெற்றி கிடைக்கும். கூட்டாளிகளின் ஆதரவு பெருமளவுக்கு இருப்பதால் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். புதிய முதலீடுகள் செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். இக்காலக்கட்டத்தில் கொடுக்கல், வாங்கலில் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள்.



**விவசாயிகள்:** நீர்வரத்து அதிகமாக இருப்பதால் பாசன வசதிகளிலும் கவனம் செலுத்துவீர்கள். விளைச்சல் நன்றாகவே இருக்கும். உங்களுக்கு நியாயமாக வர வேண்டிய பணம் தானாகவே கைக்கு வந்து சேரும்.

**அரசியல்வாதிகள்:** நெருக்கடியான சூழ்நிலைகளிலிருந்து தப்பித்துவிடுவீர்கள். உங்களுக்குத் தொந்தரவு கொடுத்தவர்கள் நண்பர்களாகவே மாறிவிடுவார்கள். திட்டமிட்ட உங்கள் பணிகள் யாவும் குறித்த இலக்குகளை அடைந்துவிடும். நெடுநாளைய லட்சியம் பூர்த்தியாகும்.

**கலைத்துறையினர்:** புதிய ஒப்பந்தங்களைத் திறம்பட முடித்து உங்களது திறமையை அனைவரும் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள். பணவரவு பெருகும். புகழைத் தக்க வைத்துக் கொள்வீர்கள்.

**பெண்கள்:** குடும்பத்தில் அனுகூலமான நிலைமைகளைக் காண்பீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாகவே இருக்கும். ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவியரிடையே சுமுகமான உறவு தொடரும்.

**மாணவர்கள்:** பெற்றோரையும் ஆசிரியர்களையும் மதித்து நடந்து நற்பெயரை எடுப்பீர்கள். தேக ஆரோக் கியம் சீரடையும். மனதை ஒருநிலைப் படுத்தி தியானம் மேற்கொள்வீர்கள். படிப்பில் மிகுந்த கவனத்துடன் ஈடுபடு வீர்கள். ஒரு குதூகலமான ஆண்டாகவே அமையும்.

பரிகாரம்: ஸ்ரீமுருகரை வழிபடவும்.

(நாளையும் வரும்)

# மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் மனு மே 19 இல் விசாரணைக்கு

கொழும்பு, ஜன. 28

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு என்பவற்றுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவொன்றை பிறப்பிக்க கோரி பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தாக்கல் செய்த மனுவை ஆராய திகதியிடப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று சோபித ராஜகருணா மற்றும் தம்மிக கனேபொல ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, அந்த மனுவை எதிர்வரும் மே மாதம் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள திகதியிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற பிரச்னைகள் தொடர்பில் தேசிய காவல்துறை ஆணைக்குழுவே ஆராய வேண்டும் என சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ரூகாந்த அபேசூரிய நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

எனினும், தேசிய பொலிஸ் ஆணைக்குழு இந்த மனுவின் அங்கத்தவராக பெயரிடப்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதன்படி, குறித்த மனுவை திருத்தம் செய்ய மனுதாரர் தரப்பினருக்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. (அ)

# இந்திய மீனவரின் 3 படகுகள் அரசுடமையாக்கப்பட்டன!

யாழ்ப்பாணம், ஜன. 28

இந்திய மீனவர்களது மூன்று படகுகள் அரசுடமையாக்கப்பட்டவதாக நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளதுடன், மேலும் நான்கு படகுகளுக்கான கட்டளையை மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு தவணையிடப்பட்டார்.

இந்திய மீனவர்களின் 17 படகுகளுக்கான உரிமை கோரும் வழக்கு ஊற்காவற்றுறை நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏழு படகுகளுக்கான வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பல தடவைகள் உரிமை கோரும் வழக்கில் உரிமையாளர் முன்னிலையாகாத மூன்று படகுகள் அரசுடமையாக்கப்பட்டவதாக நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

நேற்று ஊற்காவற்றுறை நீதிமன்றில் படகுரிமை வழக்குக்காக தமிழகம், இராமேஸ்வரம் மீனவர்கள் 10 பேர் கொண்ட குழு முன்னிலையாகியிருந்தனர்.

இதன் போது நேற்று ஏழு வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மூன்று வழக்குகள் அழைக்கப்பட்டபோது படகின் உரிமையாளர்கள் மன்றில் முன்னிலையாகவில்லை. பல தடவைகள் மன்றில் வழக்கு அழைக்கப்பட்டபோதும் உரிமையாளர் முன்னிலையாகியருக்கவில்லை. இதனால் குறித்த மூன்று படகுகளும் அரசுடமையாக்கி கட்டளையை பிறப்பித்தார் நீதவான் ஜே.கஜநிதிபாலன்.

மேலும் நான்கு படகுகளுக்கான வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உரிமையாளர்கள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

வழக்கின் சாட்சியாளர்களிடம் நேற்று மன்றில் சாட்சியம் பெறப்பட்டது. சாட்சியை சட்டத்தரணி அருட்பிரகாசம் நிரோசன் மன்றில் நெறிப்படுத்தினார்.

வழக்குத் தொடுநர் சார்பில் நீரியள்வளத்துறை திணைக்கள அதிகாரி ம.இராஜேந்திரன் குறுக்கு விசாரணைகளை மேற்கொண்டார்.

சாட்சியங்களை அவதானித்த நீதவான் குறித்த வழக்கின் கட்டைக்காக எதிர்வரும் மார்ச் முதலாம் திகதிக்கு தவணையிட்டார்.

மேலும் நேற்று மன்றில் முன்னிலையாகியிருந்த நான்கு படகுகளின் உரிமையாளர்களின் வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அன்றைய தினம் படகின் உரிமையாளர்களை மன்றில் முன்னிலையாகுமாறும் நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டுள்ளார். (அ)

# சுதந்திர தினத்தன்று கோழி பேரணி?

கொழும்பு, ஜன. 28

சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவடையும் பெப்ரவரி 4ஆம் திகதிக்குள், தற்போதைய முட்டை பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும் என அகில இலங்கை சிற்றுண்டியக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இல்லையெனில், கோழிகள் மற்றும் சேவல்களின் சத்தம் மக்களுக்கு கேட்கும் என அகில இலங்கை சிற்றுண்டியக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை சிற்றுண்டியக சங்கங்களின் தலைவர் அசேல சம்பத் ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தால் பிரச்னையை தீர்க்க முடியாவிட்டால், கோழி மற்றும் முட்டைகளுடன் சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு அணிவகுத்துச் செல்லப்போவதாக அவர் எச்சரித்துள்ளார்.

நாட்டின் முட்டைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பொது நிறுவனங்களுக்கான குழு (கோப்), அதன் வரலாற்றில் முதல் முறையாக நுகர்வோர் விவகார ஆணையத்தை (சிஏஏ) சந்திக்க வேண்டியிருந்தது என்பதைக் கேட்பது வெட்கக்கேடானது என்றும் அவர் கூறினார்.

முட்டை பிரச்னையைக் கூட தீர்க்காமல் நாட்டை கட்டியெழுப்புவதில் இந்த அரசியல்வாதிகள் எவ்வாறு ஈடுபடுகிறார்கள் என்பது கேள்வியாக உள்ளது என சம்பத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் அரசியலமைப்புகள் மற்றும் பல பெரிய தலைப்புகளைப் பற்றி பேசுகிறார்கள், ஆனால் முட்டை பிரச்னையை தீர்க்க முடியாதுள்ளார்கள்.

எவ்வாறாயினும், பெப்ரவரி 4ஆம் திகதிக்குள் இந்த முட்டைப் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால், மரியாதை வேட்டுக்களின் மத்தியில் கோழிகள் மற்றும் சேவல்களின் சத்தம் மக்களுக்கு கேட்கும் என்று அசேல சம்பத் கூறியுள்ளார். (அ)

# இரண்டு சட்டமூலங்களில் சபாநாயகர் கையொப்பம்

கொழும்பு, ஜன. 28

பாராளுமன்றத்தில் அண்மையில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தேர்தல் செலவின ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மற்றும் புனர்வாழ்வு பணியக சட்டமூலம் ஆகியவற்றில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கையொப்பமிட்டு சான்றுப்படுத்தினார்.

இதற்கமைய, இந்த சட்டமூலங்கள் 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க புனர்வாழ்வு பணியக சட்டம் மற்றும் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டம் என்ற பெயரில் அமுல்படுத்தப்படவுள்ளன.

கல்வி tv CHANNEL-1

**28.01.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**28.01.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# அரசின் அசாதாரண வரிச் சுமையை கண்டித்து கல்முனையில் போராட்டம்

அம்பாறை, ஜன. 28

**அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்கான வரி விதிப்பு சம்மந்தமாக தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு முன்பாக நடத்தியது.**

“அநீதியான அரசின் தன்னிச்சையான மக்களுக்கு பாதகமான வரிக்கொள்கையை கண் டிப்போம்” எனும் தொனிப் பொருளில் பல்வேறுபட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தக் கண்ட ஆர்ப்பாட் டத்தை மேற்கொண்டன.

அதிகரித்த வரிகளை வசூலிப்பதன் மூலம் பொதுத் துறையில் பணியாற்றும் தொழில்வாண்மை மிக் கோருக்கான ஊதியத்தை குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், அவ்வாறு வரிகள் விதிக்கப்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத்தான் என்ற போலியான பிரசாரத்தையும் முன்னெடுத்து வருகின்றது .

ஆனால் எமது வரிகள் மூலம் திரட்டப்படும் பணம் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் நோக்கத்திற்காக ஒரு போதும் பயன்படுத்தப்படப் போவதில்லை . இந்த வரி அதிகரிப்பு நியாயமற்றது என்பது மட்டுமல்ல. இதனால் எமது தேசம் அதன் சாத்தியமான முழு வளத்தினையும் இழக்கும் அபாயம் உள்ளது. என்ன விலையினைக் கொடுத்தாவது இம்மோசமான பேரிடர் நிலையை முற்றுமுழுதாக தடுக்கவேண்டும் . எமது நாட்டில் இன்று நிலவுகின்ற பொறுப்பற்ற, அநீதியான நிலை குடிமக்களை ஆதரவற்ற நிலைக்குத் தள்ளியுள்ளதையும் கவனத்திற்கொள்ள வேண்டி யுள்ளது என்று போராட்டத் தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம், இலங்கை மின்சார சபை ஊழியர்கள், சங்கம் வைத்தியர்களின் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ-6)

# வீட்டு முற்றத்தில் காட்டு யானை மரணம் வனஜீவராசிகள் திணைக்களம் விசாரணை

அம்பாறை, ஜன. 28

காட்டு யானையொன்று வீட்டு முற்றம் ஒன்றில் உயிரிழந்தமை தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இன்ஸ் பெக்டர் ஏற்றம் பிரதேசத்தில் காட்டு யானையொன்று கடந்த புதன்கிழமை உயிரிழந்திருந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தது.

குறித்த காட்டு யானை உட்பட சில யானைகள் அப்பகுதிகளில் நடமாடி திரிந்ததை அவதானித்ததாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்டனர்.

இவ்விடயம் தொடர்பில் தற்போது வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் பொத்துவில் பொலிஸார் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அண்மைக் காலமாக இப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான யானைகள் வருகை தந்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# கல்முனை பற்றிமாவில் 82 மாணவர்கள் சித்தி!

அம்பாறை, ஜன. 28

கிழக்கில் பூகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின்படி 82 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளார்கள்.

கல்லூரி அதிபர் அருட் சகோ. சந்தியாகு செபமாலை கூறுகையில் -

எமது பாடசாலையில் 225 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். ஆகக்கூடிய புள்ளியாக 178 புள்ளிகள் கிடைக்கப்பெற்றது- என்றார். (அ)

# மாணவர்களுக்கு ஹெரோயின் விற்பனை செய்தவர் சிக்கினார்!

அம்பாறை, ஜன. 28

ஹெரோயின் போதைப் பொருளைப் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகித்து வந்த சந்தேகநபரை கைது செய்துள்ள கல்முனை விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை (24) மாலை நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தியேட்டர் வீதியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் அதே பகுதியை சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் 1 கிராம் 50 மில்லிகிராம் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளது. (அ)

# தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பு




அம்பாறை, ஜன. 28

கல்வி அமைச்சினால் நடத்தப்பட அழகிய கற்கைப்பிரிவு போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற அட்டாளைசேனை முஸ்லிம் மத்திய மகா வித்தியால மாணவர்களை கௌரவிக்கும் விழா அன்மையில் இடம்பெற்றது.

ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் என்.சம்சுதீன் தலைமையில் அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த விழாவுக்கு பிரதம அதிதியாக அவரோன் சேரிட்டி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சட்டத்தரணி நஷாட் சம்சுதீன் கலந்து கொண்டு மாணவர்களை கௌரவித்து சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னங்களை வழங்கினார்.

இவ்விழாவுக்கு அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஏ.சி.எம்.ஹரீஸ், பிரதி அதிபர், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். (அ)

# கிழக்கு மாகாணத்தில் 75ஆவது சுதந்திர தினம் 2 ஆம் திகதி திருமலை ஜும்ஆ பள்ளிவாசலில்

திருமலை, ஜன. 28

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பணிப்புரைக்கமைவாக, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்காவின் அறிவுறுத்தலில் 75ஆவது தேசிய சுதந்திரதின விழா எதிர்வரும் 02 ஆம் திகதி அஸர் தொழுகையின் பின்னர் பிற்பகல் 3.30 மணிக்கு திருகோணமலை - அனுராதபுர சந்தியில் அமைந்துள்ள ஜும்ஆ பள்ளிவாசலில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆ.மன்சூர் தெரிவித்தார்.

75ஆவது தேசிய சுதந்திர தின விழா நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன் தினம் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஆ.மன்சூர் தலைமையில் இடம்பெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அன்றைய தினம் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள 75 ஆவது சுதந்திரதின விழாவுக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்கா பிரதம அதிதியாக கலந்துகொண்டு சுதந்திர தின விசேட உரையினை நிகழ்த்தவுள்ளார். இவ்விழாவில், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் வி.எச்.என். ஜெயவிக்ரம, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர், செயலாளர், உலமாக்கள், மதரசா மாணவர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர் - என்றார். (அ)

# மேற்கு டாங்கிகள் உக்ரைனில் பாவனை அழுக்கு அணுகுண்டு விளைவுக்குச் சமன்!



## எச்சரிக்கை விடுக்கின்றது ரஷ்யா

மொஸ்கோ, ஜன. 28

வியன்னாவில் இராணுவப் பாதுகாப்பு மற்றும் ஆயுதக் கட்டுப்பாடு பற்றிய பேச்சுவார்த்தைக்கான ரஷ்யாவின் தூதுக் குழுவின் தலைவர் கான்ஸ்டான்டின் கவ்ரிலோவ் அணு ஆத்திரமூட்டல்களை தடுக்க மேற்கு நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

உக்ரைன் இராணுவ இயந்திரத்தின் மேற்கத்திய ஆதரவாளர்களை அணுசக்தி ஆத்திரமூட்டல் மற்றும் அச்சுறுத்தல்களை ஊக்குவிப்பதற்கு எதிராக நாங்கள் எச்சரிக்கிறோம். லெபேர்ட் 2 டாங்கிகள், பிராட்லி மற்றும் மார்டர் கவச காலாட்படை அமைப்புக்கள் யுரேனிய ஆயுதங்களுடன் கூடிய கவச துளையிடும் எறிகணைகளை கொண்டிருப்பது எங்களுக்குத் தெரியும். அவற்றின் பயன்பாடு அப்பகுதியின் மாசுபாட்டிற்கு வழிவகுக்கிறது. முன்னாள் யுகோஸ்லாவியா மற்றும் ஈராக்கில் அதுதான் நடந்தது.

நேட்டோ தயாரித்த கனரக ஆயுதங்களுக்கான அத்தகைய வெடிமருந்துகள் உக்ரைனுக்கு வழங்கப்பட்டால், ரஷ்யாவுக்கு எதிரான அழுக்கு அணுகுண்டுகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அனைத்து விளைவுகளையும் போலவே நாங்கள் கருதுவோம் என அவர் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த மன்றத்தில் கூறினார்.

ஜேர்மன் அரசாங்கம் 14 லேபார்ட் 2 ஏ6 டாங்கிகளை உக்ரைனுக்கு அனுப்ப முடிவு செய்தது. தவிர, சில நேட்டோ நாடுகளில் உள்ள அந்த வகை டாங்கிகளை மறுஏற்றுமதி செய்யவும் அனுமதிக்கும்.

ஜேர்மனிக்கான ரஷ்ய தூதர் செர்ஜி நெச்சயேவ் இந்த முடிவை மிகவும் ஆபத்தானது என்று சாடினார், ஏனெனில் இது மோதலை ஒரு புதிய மட்டத்திற்கு உயர்த்துகிறது.

ஜேர்மனியின் தேர்வு, இரண்டாம் உலகப் போரின் போது செய்யப்பட்ட நாஜி குற்றங்களுக்கு வரலாற்றுப் பொறுப்பை அங்கீகரிக்க ஜேர்மனியின் இறுதி மறுப்பு என அவர் குறிப்பிட்டார். (அ)

# சோமாலியாவில் ஐ.எஸ். தலைவர் அமெரிக்க தாக்குதலில் உயிரிழப்பு!

நியூயோர்க், ஜன. 28

அமெரிக்கப் படைகள் இந்த வாரம் நடத்திய தாக்குதலில் சோமாலியாவில் மூத்த ஐ.எஸ்.ஐ.எஸ் தளபதி மற்றும் அவரது கூட்டாளிகள் பத்து பேர் கொல்லப்பட்டனர்.

இந்த நடவடிக்கையை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் உத்தரவிட்டு புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டதாக, பாதுகாப்புச் செயலர் லாயிட் ஆஸ்டின் தெரிவித்தார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் மூத்த நபர் பிலால் அல் சூடானி கொல்லப்பட்டார்.

“ஆபிரிக்காவில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை வளர்ப்பதற்கும், ஆப்கானிஸ்தான் உட்பட உலகளாவிய குழுவின் நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்கும் அல்-சூடானி பொறுப்பு என்று ஆஸ்டின் கூறினார்.

இந்த நடவடிக்கை அமெரிக்காவையும் அதன் கூட்டாளர்களையும் பாதுகாப்பாக ஆக்குகிறது, மேலும் இது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து அமெரிக்கர்களைப் பாதுகாப்பதற்கான எங்கள் உறுதியான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

இந்த நடவடிக்கையின்போது பொதுமக்கள் யாரும் பாதிக்கப்படவில்லை என அமெரிக்க நிர்வாகத்தின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்தில் அல் சூடானியைக் கைது செய்யும் நம்பிக்கையில், வடக்கு சோமாலியாவின் மலைகளில் உள்ள ஒரு குகை வளாகத்தை அமெரிக்க சிறப்பு நடவடிக்கைப் படைகள் சோதனை செய்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் இந்த நடவடிக்கை குறித்து பிடனுக்கு விளக்கப்பட்டு இந்த வாரம் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு, பிடன் நிர்வாகம் நூற்றுக்கணக்கான அமெரிக்க துருப்புக்களை சோமாலியாவுக்கு மீண்டும் அனுப்பியது, முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பயங்கரவாத எதிர்ப்பு பணியில் இருந்த படைகளை திரும்பப் பெறுவதற்கான முடிவை மாற்றி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அல்-ஷபாப் சோமாலிய ஸ்திரமின்மை மற்றும் பிளவுபட்ட அரசியலைப் பயன்படுத்தி, அல்-கொய்தாவின் மிகப்பெரிய மற்றும் பணக்கார உலகளாவிய இணைப்பாக மாறியுள்ளது. இது அடிப்படையில் சோமாலியா நாடு முழுவதும் செல்வாக்கு செலுத்துகிறது என்று அந்த நேரத்தில் அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார். (அ)



# வட மத்திய நைஜீரியாவின் குண்டு வெடிப்பு 54 பேர் பலி

அபுஜா, ஜன. 28

நைஜீரியாவின் வட மத்திய பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் 54 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் பலர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் உட்பட்ட பொதுமக்களே உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த குண்டு வெடிப்பை நிகழ்த்தியது யார் என்பது குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு பொலிஸார் குறிப்படுகின்றனர்.

எனினும், வடமத்திய நைஜீரியாவில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையே மோதல் தொடர்நது வந்த நிலையிலேயே குறித்த குண்டு வெடிப்புச் சம்பவம் பதிவாகியுள்ளது. (அ)

# கொரோனா தாக்கிய முதல் ஆண்டில் இதய நோயால் பலியானோர் அதிகம்!

நியூயோர்க், ஜன. 28

அமெரிக்காவில், கொரோனா தாக்கிய முதல் ஆண்டில் இதய நோயால் பலியானோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவில், கொரோனா தாக்கிய முதலாவது ஆண்டில் இதய நோயால் பலியானோர் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து இருப்பது தெரியவந்துள்ளது. கொரோனாவுக்கு முன்பு 2019ஆம் ஆண்டில், இதய நோய்க்கு 8 லட்சத்து 74 ஆயிரத்து 613 பேர் இறந்தனர்.

2020ஆம் ஆண்டு, இதய நோய்க்கு இறந்தவர்கள் எண்ணிக்கை 9 லட்சத்து 28 ஆயிரத்து 741 ஆக உயர்ந்தது. இது, 6.2 சதவீதம் அதிகம். அதற்கு முன்பு, 2003ஆம் ஆண்டுதான் அதிகம் பேர் இதய நோயால் உயிரிழந்து இருந்தனர். 9 லட்சத்து 10 ஆயிரம் பேர் இறந்தனர். 2020ஆம் ஆண்டு இறந்தவர்கள் எண்ணிக்கை, அதை தாண்டிவிட்டது.

நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன் போன்றவற்றால் ஏற்கனவே பாதிக்கப்பட்டு இருந்தவர்கள், கொரோனா காலத்தில் இதய நோயால் பாதிக்கப்பட்டு இறந்தது தெரிய வந்துள்ளது. (அ)



# ரஷ்யா மீதான தடைகளை கடுமையாக்கியது ஜப்பான்!

ரோக்கியோ, ஜன. 28

உக்ரைன் மீதான ரஷ்யாவின் சமீபத்திய தாக்குதலைத் தொடர்ந்து, ரஷ்யாவிற்கு எதிரான அதன் பொருளாதாரத் தடைகளை ஜப்பான் கடுமையாக்கியுள்ளது.

ஏற்றுமதி தடை பட்டியலில் ரஷ்யாவின் இராணுவத் திறனை கட்டுப்படுத்தும் பல பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ரஷ்ய அதிகாரிகள், நிறுவனங்களின் சொத்துக்களை ஜப்பான் முடக்கியது.

பெப்ரவரி 3ஆம் திகதி 3 முதல் ரஷ்யாவில் உள்ள 49 நிறுவனங்களுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்வதை ஜப்பான் தடை செய்யும்.

நீர் பீரங்கி, எரிவாயு ஆய்வு கருவிகள் மற்றும் குறைக்கடத்தி கருவிகள் முதல் தடுப்பூசிகள், எக்ஸ்ரே ஆய்வு கருவிகள், வெடிபொருட்கள் மற்றும் ரோபோக்கள் வரையிலான தயாரிப்புகள் இதில் அடங்கும் என்று ஜப்பானின் பொருளாதார வர்த்தக மற்றும் தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜே.எஸ்.சி. இர்குட் கார்ப், தரையிலிருந்து வான் ஏவுகணை தயாரிக்கும் எம்.எம்.இசட் அவன்கார்ட், துணை பாதுகாப்பு அமைச்சர் மிகைல் மிஜின்ட்சேவ் மற்றும் நீதியமைச்சர் கான்ஸ்டான்டின் சூய்சென்கோ மற்றும் 14 ரஷ்யா சார்பு நபர்கள் உட்பட ரஷ்யாவில் உள்ள மூன்று நிறுவனங்கள் மற்றும் 22 தனிநபர்களின் சொத்துகளையும் ஜப்பான் முடக்கும்.

ரஷ்யா உக்ரைன் முழுவதும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியதில் குறைந்தது 11பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஜேர்மனியும் அமெரிக்காவும் ஒரு புதிய ரஷ்ய தாக்குதலை எதிர்கொள்ள உதவும் டாங்கிகளை வழங்குவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு வந்துள்ளது.

இதுதொடர்பாக ஜப்பானின் பொருளாதார வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உக்ரைனைச் சுற்றியுள்ள சூழ்நிலையின் வெளிச்சத்தில் மற்றும் அமைதியைப் பாதுகாப்பதற்கான சர்வதேச முயற்சிகளுக்கு பங்களிக்க, ஜப்பான் மற்ற பெரிய நாடுகளுக்கு ஏற்ப ஏற்றுமதி தடைகளை அமுல்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கடும் குளிரால் ஆப்கானில் பலி எண்ணிக்கை 160 ஆக உயர்வு!

காபூல், ஜன. 28

சுமார் 15 ஆண்டுகளுக்கு பிறகு ஆப்கானிஸ்தானில் நிலவி வரும் கடும் குளிர் காலநிலையால் பலி எண்ணிக்கை 160 ஆக உயர்ந்துள்ளது.

வீடுகளில் வெப்பத்தை பேணுவதற்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாதமையினால் உயிரிழப்புகள் அதிகரித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஆப்கானிஸ்தானில் வெப்பநிலை மறை 34 பாகை செல்சியஸாக குறைந்துள்ளது. (அ)

# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ்; இறுதியில் சிட்சிபாஸ்!




மெல்பர்ன், ஜன. 27

அவுஸ்ரேலியா ஓப்பன் ரென்னிஸ் தொடரில் கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் இறுதி போட்டிக்கு முன்னேறினார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஒப்பன் ரென்னிஸ் தொடர் மெல்பர்னில் நடக்கிறது.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த அரையிறுதி ஆட்டம் ஒன்றில் ரஷ்ய வீரர் கரன் கச்சனோவ், கிரீஸ் வீரர் சிட்சிபாசுடன் மோதினார்.

இந்த போட்டியில் சிட்சிபாஸ் 7-6 (7-2), 6-4, 6-7 (6-8), 6-3 என்ற செற் கணக்கில் கச்சனோவை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் சிட்சிபாஸ் இறுதி போட் டிக்கு முன்னேறினார்.

# இறுதி போட்டியில் சானியா தோல்வி கிராண்ட்ஸ்லாம் போட்டியில் ஓய்வு!




மெல்பர்ன், ஜன. 28

அவுஸ்ரேலிய ஓப்பன் போட்டியில் கலப்பு இரட்டையர் பிரிவின் இறுதிச்சுற்றில் பங்கேற்ற சானியா மிர்சா இணை இறுதிச்சுற்றில் தோல்வியடைந்தது.

மெல்பர்னில் நடைபெற்று வரும் அவுஸ்ரேலிய ஓப்பன் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவில் 2ஆவது சுற்றில் தோல்வியடைந்த இந்தியாவின் சானியா மிர்சா, கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் போபண்ணாவுடன் இணைந்து விளையாடினார்.

நேற்று நடைபெற்ற இறுதிச் சுற்றில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஸ்ரெபானி - மாடோஸ் இணை, சானியா மிர்சா - ரோஹன் போபண்ணா ஜோடியை 7-6(2), 6-2 என வீழ்த்தி பட்டம் வென்றது.

இந்தத் தோல்வியுடன் கிராண்ட்ஸ்லாம் போட்டிக்கு விடை கொடுத்துள்ளார் சானியா மிர்சா. இவர், வரும் பெப்ரவரி மாதத்துடன் ரென்னிஸ் தொடரிலிருந்து ஓய்வு பெறுகிறார் என்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காதலியை கரம்பிடித்தார் இந்திய வீரர் அக்சர் பட்டேல்!

குஜராத், ஜன. 28

இந்திய கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் அக்சர் பட்டேலின் திருமணம் நேற்றுமுன்தினம் இரவு குஜராத் மாநிலம் வதோதராவில் வைத்து நடந்துள்ளது.

அக்சர் பட்டேலும், அவரின் தோழியுமான மேகாவும் நீண்ட நாட்களாக காதலித்து வந்துள்ளனர். இதையடுத்து கடந்த ஆண்டு அக்சர் படேலின் 29 ஆவது பிறந்தநாளன்று இருவரும் நிச்சயதார்த்தம் செய்து கொண்டனர்.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு குஜராத் மாநிலம் வதோதராவில் வைத்து அக்சர் பட்டேல் மற்றும் மேகாவிற்கும் திருமணம் நடந்துள்ளது.

இந்த திருமண நிகழ்ச்சியில் நெருங்கிய உறவினர்கள், குடும்ப நண்பர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.



# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் இறுதியில் சபலெங்கா!



மெல்பர்ன், ஜன. 28

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் பெலாரஸின் சபலெங்கா இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

அவுஸ்ரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரின் 11ஆவது நாளான நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி நடந்தது.

இதில், சபலெங்கா, சுற்றில் போலந்தின் மக்டா லினெட்டுடன் மோதினார்.

இதில் சபலெங்கா 7-6 (7-1), 6-2 என்ற செற் கணக்கில்வெற்றி பெற்றார். 24 வயதான சபலெங்கா கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவது இதுவே முதல் முறையாகும்.

இதற்கு முன்னர் அவர், விம்பிள்டனில் ஒரு முறையும், அமெரிக்க ஓபனில் இரு முறையும் அரையிறுதி சுற்று வரை சென்றுள்ளார். (ஐ)

# விராட் கோலியை நம்பி இந்திய அணி உள்ளது!



புதுடில்லி, ஜன. 27

இந்திய கிரிக்கெட் அணி விராட் கோலியை நம்பியிருக்கிறது, அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாட வேண்டும் என கங்குலி கூறியுள்ளார்.

இந்திய அணியின் முன்னணி வீரர் விராட் கோலி. இவர் கடந்த சில வாரங்களாக சரியான தகுதி இன்றி தவித்து வந்தார். அவரை பல்வேறு முன்னாள் வீரர்கள் விமர்சனம் செய்து வந்தனர்.

இந்நிலையில், இருபது - 20, ஒருநாள் போட்டிகளில் சதம் அடித்து தனது பழைய தகுதிக்கு திரும்பிய கோலி டெஸ்ட் கிரிக்கெட்டில் மட்டும் இன்னும் தனது பழைய தகுதி நிலைக்கு திரும்ப முடியாமல் உள்ளார்.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணி விராட் கோலியை நம்பியுள்ளது. அதனால் அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பாக செயல்பட வேண்டும் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் தெரிவித்தார்.

மேலும், விராட் கோலி சிறப்பாக செயல்படுகிறார். பங்களாதேஷ் மற்றும் இலங்கைக்கு எதிராக அவர் சிறப்பாக செயல்பட்டார். இந்திய கிரிக்கெட் அணி அவரை நம்பியிருப்பதால் அவர் டெஸ்ட் கிரிக்கெட்டிலும் சிறப்பாக செயல்பட வேண்டும். அவுஸ்ரேலிய தொடர் விரைவில் வரவுள்ளது, அது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன். உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்தியாவும் அவுஸ்ரேலியாவும் விளையாட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்றார். (ஐ)

# இலங்கைக்கு தொடர்ந்தும் நிபந்தனை விதிக்கிறது சர்வதேச நாணய நிதியம்!

## நிதி ராஜாங்க அமைச்சர் செஹான் தகவல்

கொழும்பு, ஜன. 28



**இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நிதித்துறை சீர்திருத்தங்களை வரவேற்றுள்ளபோதிலும், அனைத்து முன் நடவடிக்கைகளையும் நிறைவு செய்ய வேண்டியதன் அவசியத்தை சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. இந்த நிலையில் இந்த நடவடிக்கைகள், கடினமாக இருக்கும் என்றபோதிலும் நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள இதுவே மார்க்கமாகும் என்று நிதி ராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கிருஷ்ண மூர்த்தி சுப்ரமணியனுடன் தாம் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட செஹான் சேமசிங்க, நிதித்துறையில் மேலும் சீர்திருத்தங்களை வழங்குவதற்காக புதிய சட்டங்களை கொண்டுவர எடுக்கப்படும் என்பதை தாம் அவருக்கு தெளிவுபடுத்தியதாக குறிப்பிட்டார்.

அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை சீர்திருத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் அவரிடம் தெரிவிக்கப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# 3 மாதங்களில் மின்சார சபைக்கு 108 பில்லியன் ரூபாய் வருமானம்

## புதிய கட்டண அறவீட்டினால்

கொழும்பு, ஜன. 28

புதிய கட்டண முறை அமுல்படுத்தப்பட்ட முதல் மூன்று மாதங்களில் மின்சார சபைக்கு 108 பில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

நிதி நெருக்கடி மற்றும் நஷ்டம் காரணமாக தொடர்ந்து மின்சார விநியோகத்தை வழங்க முடியாது என்ற கூற்றினை ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# வாக்காளர் சார்பாக வேட்பாளர் செலவு செய்யும் தொகை ரூ. 20!

கொழும்பு, ஜன. 28

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, வாக்காளர் ஒருவர் சார்பாக வேட்பாளர் செலவு செய்யும் தொகையை அதிகரிக்க தேர்தல் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

வாக்காளர் ஒருவருக்கு செலவிடக்கூடிய தொகையை 15 ரூபாயாக நிர்ணயம் செய்ய தேர்தல் ஆணைக்குழு அண்மையில் தீர்மானித்திருந்தது.

எனினும், குறித்த தொகையை தற்போது 20 ரூபாயாக அதிகரிக்க தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (அ)

# வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி பெண், 2 குழந்தைகள் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 28

அநுராதபுரம் - அலையாபத்து - மாங்கடவளையில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் தாயொருவரும், இரண்டு பிள்ளைகளும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு இவர்கள் உறங்கிக்கொண்டிருந்த அறையில் தீ பரவல் ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் ஐந்து வயதுச் சிறுவனும், பத்து வயது சிறுமி ஒருவரும், 30 வயதுடைய தாயொருவருமே உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

பிள்ளைகளையும் மனைவியையும் காப்பாற்றச் சென்ற 37 வயதுடைய கணவர், தீக்காயங்களுடன் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அருகில் உள்ள வீடொன்றிலிருந்து குறித்த வீட்டுக்கு மின்சாரம் பெறப்பட்டுள்ளதாகவும், தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# யாழில் ரணிலுக்கு எதிரான போராட்டம் இருவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

யாழ்ப்பாணம், ஜன. 28

தேசிய பொங்கல் விழாவுக்கு யாழ்ப்பாணம் விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் மேலும் இருவருக்கு நீதிமன்ற அழைப்பாணை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டம் தொடர்பில் கடந்த 17ஆம் திகதி தவத்திரு வேலன் சுவாமிகளை பொலிஸார் கைது செய்து, விசாரணைகளின் பின்னர் யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியதை அடுத்து, நீதிமன்றினால் அவருக்கு பிணை வழங்கப்பட்டு குறித்த வழக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க வவுனியா மாவட்ட செயலாளர் சிவானந்தம் ஜெனிட்டா மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவன் மனோகரன் சோமபாலன் ஆகிய இருவரையும் 31ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த மூவருக்கும் எதிராக, சட்டவிரோதமான கூட்டத்தில் உறுப்பினராக இருந்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் பொலிஸார் மீது கல் வீச்சு தாக்குதல் மேற்கொண்டு பொலிஸ் உத்தியோகஸ்தருக்கு காயம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டை பொலிஸார் முன் வைத்துள்ளனர். (அ)

# தேர்தல் ஊடாக மக்கள் நிராகரித்தால் அந்த முடிவை ஏற்று செயற்படுவோம்

## ரோஹித அபேகுணவர்தன கூறுகிறார்

கொழும்பு, ஜன. 28

தேர்தல் ஊடாக மக்கள் தங்களை நிராகரித்தால், அந்த முடிவை ஏற்று செயற்படுவதற்கு தயாராகவே இருப்பதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகிந்த ராஜபக்ஷதான் போரை முடித்தார். அவரை மறக்க முடியாது.

அமைச்சுப் பதவிகளுக்காக கட்சி மாறுபவர்கள் உள்ளனர். நாம் அப்படியானவர்கள் அல்லர் - என்றார். (அ)

# தரம் ஒன்று மாணவர்களுக்கு முறையாக வகுப்பு ஆரம்பிக்கும் நிகழ்வு மார்ச் 28 இல்

கொழும்பு, ஜன. 28

அரச பாடசாலைகளில் புதிய ஆண்டிலில் (2023) தரம் ஒன்று மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்வும் முறையாக வகுப்பு ஆரம்பிக்கும் நிகழ்வும் தமிழ் சிங்கள பாடசாலைகளில் எதிர்வரும் மார்ச் 28ஆம் திகதி இடம்பெற இருக்கின்றது .

முஸ்லிம் பாடசாலைகளில் ஏப்ரல் மாதம் 25ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் என். எம்.ரணசிங்க சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

முறையாக வகுப்புகளை ஆரம்பிக்கும்போது ஆரம்பக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை பெற்றோர்களுக்கு அறிவூட்டம் செய்கின்ற வேலைத்திட்டம் ஒன்றும் முன் எடுக்கப்படவேண்டும். அதை விட கோவிட் 19 முறைக்கு அமைவாக குறுகிய நேரத்துக்குள் இந்த நிகழ்வை நடத்தி முடிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (அ)

# நீர் குழாய் வெடித்து ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 28

மாவனெல்ல பிரதேசத்தில் உயர் அழுத்த நீர் குழாயொன்று வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹெம்மாதகம பிரதேசத்தை சேர்ந்த 68 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாவனெல்லை ஹெம்மாதகம வீதியில் வெட்டேவ நோக்கிச் செல்லும் நீர் குழாய்களின் அழுத்தத்தை மாவனல்லை நீர் வழங்கல் சபைக்குச் சொந்தமான நிறுவனமொன்று பரிசோதித்துக் கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த நபர் அந்த வீதியின் ஊடாக பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் குழாய் வெடித்ததில் துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த நபர் மாவனெல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவனல்லை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# தனது 15 வயது மகளைப் பணத்துக்காக வயோதிபர்களுக்கு விருந்தாக்கிய தாய்!

## 84 வயது முதியவர் உள்ளிட்ட 5 பேர் கைது

கொழும்பு, ஜன. 28

15 வயது சிறுமியை விபசாரத்தில் ஈடுபடுத்திய சந்தேகத்தின் பேரில் சிறுமியின் தாயும் மேலும் நால்வரும் கைது செய்யப்பட்டனர் என பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பாணந்துறை, கெசல்வத்தை மற்றும் கோரகன ஆகிய பகுதிகளிலிருந்து சிறுமியை பணத்திற்காக அழைத்துச் சென்று வன்புணர்வு கொண்டவர்களே என பொலிஸார் தெரிவித்தனர். அவர்களில் 84 வயதான மரக்கறி வியாபாரியும் அடங்குகிறார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி ஒருவரை பணத்திற்காக வயதானவர்களுக்கு விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் பேரில் பொலிஸ் குழுவினர் சிறுமியை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

பொலிஸ் விசாரணையில், அப்பகுதியைச் சேர்ந்த பெண் தொழிலதிபர் ஒருவர், சிறுமியின் தாயை ஏமாற்றிப் பணம் கொடுத்து, சிறுமியை பாலுறவுக்காக விற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேகத்திற்கிடமான தொழிலதிபரான பெண் பிரதேசத்தில் தப்பிச் சென்றுள்ளார் எனவும், அவரைக் கண்டுபிடிக்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் 42, 45, 54 மற்றும் 84 வயதுடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## தமிழர்களின்...

தீர்விற்காக இதனை முன்னெடுக்குமாறு 6 அமைப்புகளும் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

1. உலகளாவிய தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு
2. வட அமெரிக்க தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு
3. நியூயோர்க் இலங்கை தமிழ் சங்கம்
4. இலங்கையின் சமத்துவம் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பு
5. ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் நடவடிக்கை குழு
6. உலகத்தமிழர் அமைப்பு

ஆகிய 6 அமைப்புகளே அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு கூட்டாக கடிதமொன்றை அனுப்பியுள்ளன.

புத்தாண்டு புதிய நம்பிக்கைகளைக் கொண்டு வருவதைப் போன்று, இலங்கையில் 7 தசாப்த காலத்துக்கும் மேலாக தொடரும் இனப்பிரச்னைக் கான தீர்வினை வழங்குவதற்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் உறுதி செய்வற்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு காங்கிரஸை வலியுறுத்துவதாக அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்ட யுத்தம், தமிழ் மக்கள் மீது மிக மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 3 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டு அல்லது காணாமலாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள அந்த கடிதத்தில், இறுதிக்கட்ட போரின் போது, சுமார் 1,46,679 தமிழர்களுக்கு என்ன நேர்ந்தது என தெரியவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவும் கருத்து தெரிவித்திருந்ததுடன், "இனப்படுகொலையை தடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை தவறியிருப்பதாக" அவர் சுட்டிக்காட்டியிருந்தமையும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் தமிழ் மக்களின் அரசியல் அடையாளத்தை சுதந்திரமாக நிர்ணயித்துக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்கும் விவகாரத்தில், சர்வதேச சட்டங்கள் அனுசரிக்கப்படுவதை அமெரிக்கா உறுதிப்படுத்த வேண்டும் எனவும் குறித்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

இவ்வாறான பின்னணியில், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதை முன்னிறுத்திய அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் பயன்படுத்துமாறும், இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டது என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளுமாறும் வலியுறுத்துவதாக 6 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் அமெரிக்க காங்கிரஸிடம் கோரியுள்ளன. (அ)

## 402 உள்ளூராட்சி...

போட்டியிடும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் தங்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.

இந்த முறை தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் 13 அரசியல் கட்சிகளும் 15 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

13 அரசியல் கட்சிகள் சார்பில் 135 வேட்புமனுக்களும் 15 சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 15 வேட்புமனுக்களுமாக 150 வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு தேர்தலுக்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த முறை தேர்தலில் வாக்களிப்பதற்கென யாழ்.மாவட்டத்தில் 4 லட்சத்து 86 ஆயிரத்து 423 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளார்கள்.

அவர்கள் வாக்களிப்பதற்காக 514 வாக்களிப்பு நிலையங்கள் யாழ்.மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இம்முறை உள்ளூராட்சி மன்ற சட்டத்திற்கிணங்க அந்தந்த வட்டாரங்களிலேயே வாக்குகள் எண்ணப்பட்டு வட்டாரங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்படவேண்டிய நிலையில் உள்ளோம்.

அந்த வகையில் 243 வாக்கு எண்ணும் நிலையங்கள் யாழ். மாவட்டம் முழுவதும் அமைக்கப்படவுள்ளன.

அந்த 243 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குகள் எண்ணப்பட்டு வட்டார தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு பின்னர் மாவட்ட ரீதியாக முடிவுகள் அறிவிக்கப்படும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்கும் வட்டார அடிப்படையில் 243 உறுப்பினர்களும் கட்சிகள் பெற்றுக்கொள்கின்ற வாக்குகளின் அடிப்படையில் தெரிந்து அனுப்பப்பட வேண்டிய 159 வேட்பாளர்களுமாக 402 உறுப்பினர்கள் 17 சபைகளுக்கும் தெரிவு செய்யப்படவேண்டியுள்ளனர்.

இந்த 402 உறுப்பினர்கள் தெரிவுக்காக யாழ். மாவட்டத்தில் 4111 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். 13 கட்சிகள் சார்பில் 3686 வேட்பாளர்களும் 15 சுயேச்சைக் குழுக்கள் சார்பாக 425 வேட்பாளர்களும் போட்டியிடவுள்ளனர்.

இதன் அடிப்படையில் மொத்த வாக்காளர் தொகையிலேயே 0.85 வீதமான வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட உள்ளமை குறிப்பிடத்தக்கது-என்றார்.

## அடாத்தான...

பகுதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாக மனித உரிமை ஆணையத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மின்சார சபை மற்றும் அமைச்சு நாட்டின் சட்டத்தை மதிக்காமல் தன்னிச்சையாகச் செயல்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனான சந்திப்பின் போது, நடந்து கொண்டிருக்கும் 2022 உயர்தரப் பரீட்சை முடியும் வரை மின்வெட்டுகளை விதிப்பதைத் தவிர்ப்பதற்கு மின்சாரசபை ஒப்புக்கொண்டது.

இதேவேளை, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரை மின்சாரத் தடையை அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்து மூலம் அறிவித்தது. (அ)

## இளவாலை...

குறித்த நபரின் தலை மீது கம்பியால் தாக்கினர். இந்த தாக்குதலில் படுகாயமடைந்த நபர் அயலில் உள்ளவர்கள் மூலம் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நிரோஜன் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

இந்த படுகொலை குறித்து இருவர் நேற்று இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனும் 20 வயதுடைய இளைஞனுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## யாழ்....

அறிவிக்கப்பட்டு தேர்தல் வேலைகள் இடம்பெற்று வரும் நிலையில் நேற்றைய தினம் வரை 3 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக நடவடிக்கைக்கு அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# இராணுவ வாகனம் மோதி யாழில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். குறித்த நபர் நேற்றுமுன் தினமே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் சவரிமுத்து சகாயரூபன் (வயது 59) என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்துக்கு உள்ளாகியவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கான அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியின் வேம்படிச் சந்தியில் கடந்த 20ஆம் திகதி நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வட்டிக்கு பணம் பெற்றவர்களை தாக்கிய மற்றொருவரும் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுத்தவர்களிடம் பணத்தை மீள வசூலிப்பதற்காக அவர்களை அடித்து துன்புறுத்திய மற்றொருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த அவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மீற்றர் வட்டிக்கு பணம் பெற்றவர்களை தோட்டக் காணி ஒன்றுக்கு அழைத்து சென்று கொடூரமாகத் தாக்கி துன்புறுத்தும் காணொளி காட்சிகள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன.

இந்த காணொளிகள் தொடர்பில் வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது. தாக்குதல் நடத்துபவர்கள் தொடர் பில் தகவல் தெரிந்தோர் வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ தகவல் வழங்குமாறு கோரப்பட்டிருந்தது.

மீற்றர் வட்டிக்கு வழங்கிவிட்டு பணத்தை மீள வசூலிப்பதற்காக வர்த்தகர்களை அடித்துத் துன்புறுத்தும் இரு பகுக்கும் மேற்பட்ட காணொளிகள் பொலிஸ் உயர்மட்டத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அவற்றின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சுன்னாகத்தில் காரில் பயணித்தவரை வாகனத்தினால் மோதிக் கொலை செய்ய முயற்சித்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என பொலிஸில் சரணடைந்த ஜெகன் உள்ளிட்ட மூவருக்கும் மீற்றர் வட்டிக்கு பெற்றவர்களை அடித்துத் துன்புறுத்தும் சம்பவத்துடன் தொடர்புள்ளமை தெரிய வந்தது.

மருதனார்மடம் சந்தைக்கு அண்மையாக உள்ள தோட்டக் காணிக்கு அழைத்தே பலரை அடித்துத் துன்புறுத்தியும் அச்சுறுத்தியும் உள்ளனர் என்பதும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

காணொளியில் முகக்கவசம் அணிந்து அடித்து துன்புறத்தும் நபர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப்பின் குழுவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

இந்த நிலையில் காணொளியில் தலைக்கவசம் அணிந்தவாறு தாக்குதல் நடத்துபவர் என அடையாளம் காணப்பட்டவர் சுன்னாகம் பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

## நட்டஈடு...

காலங்களில் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தன.

வலி.வடக்கு பிரதேச மக்களின் காணிகள் நீண்ட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வந்தன.

இந்நிலையில் கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் வலி.வடக்கு பிரதேசத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர்.

இவ்வாறான நிலையில் பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களை பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று முன்தினம் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நடவடிக்கையில் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி, நிலஅளவை திணைக்களம், விலை மதிப்பீட்டு அதிகாரிகள், கிராம சேவகர்கள் ஈடுபட்டனர்.

இப்பதிவு நடவடிக்கையில் ஈடுபட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

எங்களுக்கு நட்ட ஈடு எதுவும் தேவையில்லை. எமது சொந்தக் காணிகளே வேண்டும். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரினர். (அ)

## '13'ஐ...

திபதி தெரிவித்தபோது ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடும் ஆட்சேபனை தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்று தென்னிலங்கைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## போதைப்பொருள்...

கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர், போதைப்பொருள் வியாபாரத்தைக் கைவிடுமாறு போதைப் பொருள் கடத்தல்காரர்களிடம் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்தார்.

போதைப்பொருள், கொலை, கற்பழிப்பு போன்ற குற்றங்களுக்கு மரண தண்டனை அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே தனது கருத்து எனவும் அமைச்சர் மேலும் கூறினார். (அ)

## இலங்கையில்...

துப்பொருட்கள் உபகரணங்கள் தட்டுப்பாடு காரணமாக இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு உலக சுகாதார ஸ்தாபனம் தீர்வை வழங்கவேண்டும்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு உட்பட அதிகாரிகளுக்கு அவசியமான அழுத்தங்களை உலக சுகாதார ஸ்தாபனம் கொடுக்க வேண்டும்.

மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தட்டுப்பாடுகள் காரணமாக மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி குறித்து நாங்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதிக்கும், சுகாதார அமைச்சருக்கும் தெரிவித்து வந்துள்ளோம். தாங்க முடியாத அளவுக்கு மருந்துப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

மருந்துகளை கொள்வனவு செய்வதில் பல முறைகேடுகள் ஊழல்கள் இடம்பெறுகின்றன.

அதிகாரிகளிடம் இது குறித்து வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

நோயாளிகள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு உரிய அதிகாரிகளுக்கு தெரிவிப்பதன் மூலம் தீர்வை காணமுடியாது என்பதை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உணர்ந்துள்ளது.

இதன் காரணமாகவே உலக சுகாதார ஸ்தாபனத்தை நாட தீர்மானித்துள்ளோம்- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# வளர்ப்பு நாயை மீட்க கிணற்றில் இறங்கிய இளைஞன் உயிரிழப்பு!

## கிளிநொச்சியில் நேற்று துயரம்

கிளிநொச்சி, ஜன. 28

**கிளிநொச்சியில் கிணற்றுக்குள் தவறி விழுந்த வளர்ப்பு நாயை மீட்க முயன்ற இளைஞன், கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்த துயரச்சம்பவம் இடம்பெற்றது.**

**நேற்றுக் காலையில் இந்த சம்பவம் நடந்தது.**

கிளிநொச்சி, உதயநகர் மேற்கு பகுதியை சேர்ந்த 24 வயதான இளைஞன் ஒருவரே உயிரிழந்தார். அவர் பெற்றோருக்கு ஒரே மகன்.

அந்த வீட்டிலிருந்த சுமார் 6 அடி விட்டமும், 30 அடி ஆழமும் கொண்ட மண் கிணற்றில் வளர்ப்பு நாய் விழுந்துள்ளது. நாயை மீட்க குடும்பத்தினர் முயற்சி மேற்கொண்டுள்ளனர். இதன்போது, மெல்லிய தும்புக் கயிற்றை கட்டி 24 வயது மகன் கிணற்றுக்குள் இறங்கியுள்ளார்.

கயிறு அறுந்து, இளைஞன் கிணற்றுக்குள் விழுந்துள்ளார். இதன்போது அவர் சேற்றில் சிக்கினார் எனக் கூறப்படுகிறது.

எனினும், மேலிருந்து அனுப்பப்பட்ட மற்றொரு கயிற்றில் நாயை இணைத்து, மேலே எடுக்க உதவியுள்ளார். பின்னர் அவர் நீரில் தத்தளித்து, சேற்றில் புதையுண்டுள்ளார்.

இதையடுத்து, குடும்பத்தினர் அயலவர்களுக்கு தெரிவித்ததையடுத்து, கிணற்று நீரை வெளியேற்றி மேற்கொண்ட தேடுதலில் இளைஞன் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். (அ)

# கடலாமையுடன் 2 பேர் கைது!

மன்னார், ஜன. 28

மன்னார்-கீரி பகுதியில் இறைச்சிக்காக கொண்டு சென்ற கடலாமையுடன் நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் 2 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கீரி பகுதியைச் சேர்ந்த 50 மற்றும் 55 வயதுடையவர்கள் என மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். மேலும் உயிருடன் மீட்கப்பட்ட கடலாமை 35 கிலோ எடை கொண்டது என தெரிய வருகிறது.

மன்னார் பிரதேச குற்றத்தடுப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த கடலாமை யை உயிருடன் மீட்ட தோடு,குறித்த இரு நபர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் மீட்கப்பட்ட கடலாமை மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)



# பௌத்த மத ஸ்தலங்களின் பாதுகாப்பை நீக்கவேண்டாம்

## மகாநாயக்கர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஜன. 28

நாட்டின் வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த மத ஸ்தலங்களின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அதிகாரிகளை நீக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக மூன்று பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

பௌத்த மத ஸ்தலங்களின் பாதுகாப்பையும் இருப்பையும் உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை என ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் யுத்தத்தின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பௌத்த மதத் தலங்களைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் அளப்பரிய பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

அவர்கள், பௌத்த பிக்குகளுக்கும் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

எனவே அந்த இடங்களில் இருந்து பாதுகாப்புப் படையினரை அகற்றுவது அந்த இடங்களின் வளர்ச்சிக்கு இடையூறாக அமையும் என்று மூன்று பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (அ)

# பெப்.17வரை மின்சார தடையை நடைமுறைப்படுத்தவேண்டாம்!

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு எழுத்து மூலம் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 28

உயர்தரப் பரீட்சை நடைபெறும் பெப்ரவரி 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மின்வெட்டை அமுல்படுத்தவேண்டாம் என இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எழுத்துமூலம் அறிவித்துள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவினால் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் 3 இலட்சத்து 31 ஆயிரத்து 709 பரீட்சார்த்திகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நேற்று முன்தினம் முதல் எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி வரை திட்டமிடப்பட்ட மின் தடையை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அங்கீகரிக்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, பெப்ரவரி 17ஆம் திகதி வரை தடையற்ற மின்சாரத்தை வழங்குமாறு மின்சார சபைக்கு அறிவுறுத்துவதாகவும், அதுவரை திட்டமிடப்பட்ட மின்சாரத் தடைகளுக்கான அனுமதிக் கோரிக்கைகளை சமர்ப்பிப்பதைத் தவிர்க்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதியில் மின் தடை அமுல்படுத்தப்பட்டால், மின்சார பரிமாற்றம் மற்றும் மொத்த விநியோக உரிமம் எண் ஈ.எல்./ரி/09-002 இன் நிபந்தனை 30(10)ஐ மீறுவதற்கு மின் விநியோக உரிமதாரர் சட்டபூர்வமாக பொறுப்பேற்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# டயானாவின் ஆட்சேபனைக்கு இரண்டு வார கால அவகாசம்!

கொழும்பு, ஜன. 28

சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரித்தானிய பிரஜையாக இருப்பதால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதியற்றவர் என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவுக்கு எதிராக ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று கால அவகாசம் வழங்கியுள்ளது.

டயானா கமகே சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஷவீந்திர பெர்னாண்டோ, தனது வாடிக்கையாளர் உத்தியோகபூர்வ உறுதிமொழியின் பேரில் வெளிநாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ளதால் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய மேலும் இரண்டு மாத கால அவகாசம் கோரினார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹபீல் பாரிஸ், நிஷிகா பொன்சேகா ஒத்திவைப்புக்கு ஆட்சேபனைகளை எழுப்பினர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, டயானா கமகேயுக்கு ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கியது.

டயானா கமகே பாராளுமன்ற உறுப்பினராக இருக்க தகுதியற்றவர் என்று உத்தரவிடுமாறு கோரி சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் இந்த மனுவை தாக்கல் செய்தார்.

இந்த நிலையில், இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரிட்டன் பிரஜை எனவும், பிரிட்டன் பிரஜை ஒருவரே பிரிட்டன் கடவுச்சீட்டை வைத்திருக்க முடியும் எனவும் மனுதாரர் கூறியுள்ளார்.

வேற்று நாட்டில் குடியுரிமை பெற்றதன் மூலம், பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே இலங்கை பிரஜையாக இருப்பதை நிறுத்தியுள்ளார் என மனுதாரர் தெரிவித்துள்ளார். (அ)

# கச்சதீவு ஆலய உற்சவத்தில் 8,000 பக்தர்களுக்கு அனுமதி!

## 1000 அலுவலர்களும் பங்கேற்பர்



கொழும்பு, ஜன. 28

இம்முறை கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தை 8 ஆயிரம் பேருடன் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

அந்த வகையில் 4,500 இலங்கை பக்தர்களும் 3500 இந்திய பக்தர்களும் ஆயிரம் அரச அரச உத்தியோகத்தர்கள், விருந்தினர்களின் பங்கு பற்றுதலோடு இவ்வருட கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தை நடத்துவதற்கு இலங்கை மற்றும் இந்திய தரப்புகளின் இணக்கத்துடன் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பில் நடைபெற்ற முன்னாயத்தக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# தேர்தல் செலவின சட்டமூலம் சபாநாயகர் ஒப்புதல் அளிப்பு

கொழும்பு, ஜன. 28

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் மற்றும் புனர்வாழ்வு பணியகம் தொடர்பான சான்றிதழை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அங்கீகரித்துள்ளார்.

இந்த சட்டமூலத்துக்கு சபாநாயகரால் அண்மையில் அனுமதி வழங்கப்பட்டது. தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் மற்றும் மறுவாழ்வு பணியக சட்டமூலம் ஆகியவை இந்த மாத தொடக்கத்தில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

அதன்படி, 2023 ஆம் ஆண்டின் புனர்வாழ்வுப் பணியகச் சட்டம் எண். 2 மற்றும் 2023 ஆம் ஆண்டின் தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம் எண். 3 ஆக சட்டமூலங்கள் நடைமுறைக்கு வருகின்றன. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.